ஈரோடு

மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி -1

பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் **சீதாராம் குருமூர்த்தி** இ.ஆ.ப.

முதன்மை ஆணையர்

பதிப்பாசிரியர்

முனைவர் செ. இராசு

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

சென்னை – 600 008

2007

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**Erodu Mavatta Kalvettukal Vol. 1**
Editor	:	Principal Commissinor
Copy Right	:	T.N. State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	188
Year	:	2007
Type Point	:	12
No.of. Pages	:	272
Paper Used	:	80 Gsm Maplitho
Type Setter	:	**Cavin Laser Printers** 19/9, Devaraja Mudhali Street, Chennai - 600 005. Phone: 9940351234.
Printer	:	**The Chennai Printers' Industrial Co-op. Society Ltd.,** 118, Big Street, Triplicane, Chennai - 5. P h: 28446287
Publisher	:	**State Dept. of Archaeology,** Tamil Valarchi Valagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	**Rs. 130 /-**

பதிப்புரை

தமிழகத்திற்குச் சிறப்பு, ஒவ்வொரு ஊரும் ஏதேனும் ஒரு தொல்லியல் சான்றினைப் பெற்று விளங்குவதாகும். தொல்லியல் சான்றுகளில் முதன்மையானவை கல்வெட்டுச் சான்றுகள். பண்டைய எழுத்துக்களில் உள்ள இவற்றைப் படித்தறிந்து இன்றைய எழுத்துக்களில் நூல்களாக வெளியிடுவது ஒரு தனித் திறமையாகும். இத்திறமையைப் பலரும் பெற்றிடத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பல ஆக்கப் பணிகளைச் செய்து வருவதோடு கல்வெட்டுத் தொகுதிகளை வெளியிடும் பணியினையும் முதன்மையாகக் கொண்டுள்ளது.

தற்பொழுது வெளிவரும் ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி- 1, நல்ல பல செய்திகளைக் கொண்ட கல்வெட்டுகளுடன் வெளிவருகிறது. அரசர் பெயருடன் உள்ள கல்வெட்டுகளுக்கு இணையாக அரசின் ஆளுமை குறிப்பிடாத மக்கள் கல்வெட்டுகளும் சரிபாதி எண்ணிக்கையைக் கொண்டுள்ளன.

புதிய ஏரி தோண்டிக் கட்டுதல், புதிய அணை ஏற்படுத்துதல், புதிய வாய்க்கால் ஓடச் செய்தல், உடைந்த குளங்களைப் பழுதுபார்த்தல், வறட்சிக் காலங்களில் நெல்லுக்குப் பதிலாக கம்பு, வரியாகப் பெறுதல் ஆகிய செய்திகளும் தீங்கு செய்வோர் 'நரகத்திற்கு நாற்றங்கால் ஆவர்', 'கண்ணும் மண்ணும்' இழப்பர் என்ற குறிப்புகளும் பண்டு இப்பகுதி வேளாண்மை வாழ்க்கையை அடியொட்டியது என்பதைப் புலப்படுத்துகின்றன. எனினும் இன்று இப்பகுதி வாழ்க்கை, மிகுதியும் தொழில் சார்புடையது என்பதை கருதிப்பார்க்கத் தோன்றுகிறது.

கல்வெட்டுத் தொகுதிகள் வெளியிடும் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்ற நோக்கில், ஓய்வு பெற்ற கல்வெட்டாய்வு வல்லுநர்கள் பதிப்புப் பணியில் ஈடுபடக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். கடந்த அரை நூற்றாண்டாகக் கல்வெட்டாய்வில் ஈடுபட்டு வருபவரும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேனாள் கல்வெட்டுத் துறைப் பேராசிரியருமான முனைவர் செ. இராசு, தனது இசைவினைத் தெரிவித்து இத்தொகுதியைப் பதிப்பித்துள்ளார். தென்னிந்தியக் கோயிற் சாசன நூலில் வெளிவந்து இன்று இல்லாத கல்வெட்டுகளையும் அவர்பார்வைப்படியாகச் சேர்த்து வைத்திருந்த கல்வெட்டுகளையும் இத்தொகுதியில் இணைத்துள்ளார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் 2003, 2004, 2005 ஆகிய ஆண்டுகளில் கோயம்புத்தூர் தொல்லியல் அலுவலர் திரு பெ. கௌதமபுத்திரன்,

கல்வெட்டாய்வாளர் அமரர் முனைவர் இரா.ப. கருணானந்தன் ஆகியோரால் இத்துறை இளநிலைக் கல்வெட்டாய்வாளர்கள், கல்வெட்டுச் சிற்றெழுத்தர்கள், கோயம்புத்தூர் அலுவகப் பணியாளர்கள் உதவியுடன் படியெடுக்கப்பட்டன. முனைவர் ர. பூங்குன்றன், உதவி இயக்குநர் (ஓய்வு) இத்தொகுதி பதிப்புப் பணிக்கு உதவிகள் செய்தார். இத்துறை முன்னாள் மாணவர்களும் கல்வெட்டுப் படியெடுப்போருமான திரு.க. ஈஸ்வரன், திரு. கு. குமரவேல், திரு. சேட்டு, திரு. உலகநாதன் ஆகியோர் கிரந்த எழுத்துக்கள் சேர்த்தல், சொல்லடைவு தயாரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டனர். இத்துறை கல்வெட்டுப் பிரிவுத் தலைவர் முனைவர் சு. இராசகோபால் நூல் வடிவமைப்பையும் அச்சுப்பணியையும் மேற்கொண்டார். இவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

இத்தொகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள கிரந்த எழுத்துக்கள் சென்னை ஐ.ஐ.டி. பேராசிரியர் முனைவர் கல்யாணகிருஷ்ணன் வடிவமைத்தவை. குறியீடுகள், தமிழ் எண்கள் புலவர். கண்ணையன் வழியாகத் தமிழ் இணையத்தில் பெறப்பட்டவை. இவர்களுக்கு என் நன்றி.

நிதி ஒதுக்கீடு அளித்து, தொல்லியல் துறை பல வெளியீடுகளைக் கொண்டுவர ஊக்கப்படுத்தி வரும் தமிழ்நாடு அரசிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழக அரசியல், பொருளாதார, சமூக வரலாற்றிற்குப் புதிய தரவாக வெளிவரும் இத்தொகுதியினை ஆய்வாளர்களும், மாணவர்களும் பொதுமக்களும் பயன்படுத்தி தமிழகத்திற்கு மேலும் சிறப்புத் தருவார்கள் என்று நம்புகின்றேன்.

23.03.07

சென்னை

சீதாராம் குருமூர்த்தி

முதன்மை ஆணையர்

பொருளடக்கம்

பதிப்புரை

முன்னுரை i

ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள்

ஈரோடு வட்டம் 1–88

அறச்சலூர் 1

அனுமன்பள்ளி 8

ஈரோடு 14

கொடுமுடி 42

கொளாநல்லி 51

சிவகிரி 65

முருங்கத்தொழுவு 78

காங்கயம் வட்டம் 89–160

அகிலாண்டபுரம் 89

ஊதியூர் 98

கீரனூர் 111

நத்தக்காடையூர் 121

பாப்பினி 135

மடவிளாகம் 139

மருதுறை 147

முத்தூர் 149

கோபிசெட்டி பாளையம் வட்டம் 161–163

அத்தாணி 161

சத்திய மங்கலம் வட்டம் 164–166

சத்தியமங்கலம் 164

பவானி வட்டம் 167–214

அந்தியூர் 167

உலகடம் 172

பட்லூர் 188

பவானி 198

பெருந்துறை வட்டம் 215–232

கத்தாங்கண்ணி 215

கல்வெட்டுக்களின் சொல்லடைவு 233

படங்கள்

முன்னுரை

ஈரோடு மாவட்டம் ஒரு புதிய மாவட்டம். 18.09.1978 அன்று தமிழக அரசு கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்த 7 வட்டங்களைப் பிரித்துத் 'தந்தை பெரியார் மாவட்டம்' என அமைக்கப்படும் என்று அறிவித்தது. 17.09.1979 அன்று 'பெரியார் மாவட்டம்' என அறிவிக்கப்பட்டு 24.09.1979 முதல் தனி மாவட்டமாக இயங்கியது. 17.1997 முதல் இம்மாவட்டம் 'ஈரோடு மாவட்டம்' என்று பெயர் மாற்றம் பெற்றது.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மெக்கன்சியின் உதவியாளர்கள் ஈரோடு மாவட்டம் பகுதியில் பல கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் தொகுத்தனர். அவை பெரும்பாலும் தென்னிந்தியக் கோயில் சாசனத் தொகுதிகளில் அச்சாகியுள்ளன. 1887ல் அரசு கல்வெட்டாய்வாளராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் உல்சு (ஜெர்மன்) 1891 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஈரோடு கல்வெட்டுக்களில் சிலவற்றைப் படி எடுத்தார். தொடர்ந்து பல ஆண்டு கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டன. 1920 ஆம் ஆண்டு காங்கயம், தாராபுரம் வட்டப் பகுதியில் கிராமம் தோறும் பெரும்பாலான கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டன. இதுவரை ஏறத்தாழ 600 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. 100 ஊர்களுக்கு மேல் கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டிருந்தாலும் ஈரோடு (6) கொளிஞ்சிவாடி (6) நம்பியூர் (9) சத்தியமங்கலம் (1) டணாய்க்கன் கோட்டை (11) ஆகிய ஐந்து ஊர்களில் உள்ள கல்வெட்டுக்களில் 33 மட்டுமே இதுவரை தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் அச்சாகியுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை ஈரோடு மாவட்டக் கல்வெட்டுக்களை வெளியிடும் முயற்சியை மேற்கொண்டு இத்தொகுதியில் ஈரோடு (7) காங்கயம் (8) கோபிசெட்டிபாளையம் (1) சத்தியமங்கலம் (1) பவானி (4) பெருந்துறை (1) ஆகிய ஆறு வட்டங்களைச் சேர்ந்த 22 ஊர்க் கல்வெட்டுக்களை வெளியிட்டுள்ளது. இத் தொகுதியில் சேரர், சோழர், பாண்டியர், போசளர், விசயநகரர், மதுரை நாயக்கர், மைசூர் உடையார், உம்மத்தூர்த் தலைவர்கள், தாரமங்கலம் கெட்டி முதலிகள் மரபு காலத்திய கல்வெட்டுக்கள் வெளியிடப்படுகின்றன. இத் தொகுதியில் உள்ள கல்வெட்டுக்களில் பாதிக் கல்வெட்டுக்கள் அரச மரபினர் குறிப்போடு உள்ளன. மற்ற பாதிக் கல்வெட்டுகள் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்களால் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்களாகும். மெக்கன்சியின் உதவியாளர்களால் படி எடுக்கப்பட்டு, தென்னிந்தியக் கோயில் சாசனங்களில் உள்ள கல்வெட்டுக்களும், தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் உள்ள கல்வெட்டுக்களும் அந்தந்த ஊர்க் கல்வெட்டுக்களுடன் சேர்த்து வெளியிட்டிருப்பது கல்வெட்டு அன்பர்களுக்கும் உள்ளூர் வரலாற்றுக்கும், சமுதாய வரலாற்றுக்கும் பெரிதும் துணை புரிபவை. இது இத் தொகுதியின் தனிச் சிறப்பாகும்.

தமிழ்-பிராமி கல்வெட்டு

அறச்சலூர் ஆண்டிபாறைக் கல்வெட்டு முதலாவதாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் இசை, பிராமியிலிருந்து வட்டெழுத்து வரிவடிவத் தொடக்கம், தமிழ் வரிவடிவ ஆய்வு இவற்றிற்கு அக்கல்வெட்டு மிக முக்கியமானதாகும். ஈரோடு மாவட்டத்தின் தொன்மையான கல்வெட்டும் அதுவே.

அரச மரபுகள்

சேரர்: கொடுமுடி வீர நாராயண இரவிவர்மன் கல்வெட்டும் (1) ஈரோடு கோஇரவிகோதையின் கல்வெட்டுக்களும் (3) இத் தொகுதியில் உள்ளன. கொடுமுடியில் சேர மன்னன் மாசிமாதம் அவன் பிறந்த நாளில் பெருந்திரு அமுது செய்யக் கொடையளித்துள்ளான். ஈரோட்டில் தென்னவன் பேரரையனான வஞ்சி வேள் தாழி தன் பெயரில் "தாழிஏரி" வெட்டிய செய்தியும், குழந்தையின் பேருடைச் சிறப்புக்கு அரசன் நிலக் கொடை அளித்ததும் கூறப்படுகிறது.

சோழர்: கொங்குச் சோழர்

பேரரசுச் சோழன், முதல் பராந்தகனின் (907-953) 15 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஈரோடு பள்ளிகொண்ட பெருமாள் கோயிலில் உள்ளது. ஆயர் குழுவான திருவாய்ப்பாடி நாட்டார் வெண்ணைக் கூத்த நாயனாருக்குக் கொடையளித்துள்ளனர்.

சோழர்கள் சார்பில் கொங்கு நாட்டைச் சோழர் பெயருடன் ஆட்சி புரிந்த கொடும்பாளூர்த் தலைவர்களான கொங்குச் சோழர் கல்வெட்டுக்கள் ஈங்கூர், கொடுமுடி, பிடாரியூர் கத்தாங்கண்ணி, கீரனூர், மடவிளாகம், முத்தூர், சத்தியமங்கலம், ஓலகடம், பட்டிலூர் ஆகிய ஊர்களில் உள்ளன. உத்தமசோழ வீரநாராயணன், விக்கிரம சோழன் குலோத்துங்க சோழன் ஆகியோர் கல்வெட்டுக்கள் உள்ளன. இரு கொங்கும் ஆண்ட வீரசோழன் கல்வெட்டு 'திரிபுவனவீர தேவன்' என்ற பெயரில் உள்ளது. ஈங்கூரில் அய்ஙனார் உருவச்சிலை எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளது. கத்தாங்கண்ணியில் கிரகனத்தால் கேடு நிகழாதிருக்கக் கொடை கொடுக்கப்பட்டுள்ளது. கத்தாங்கண்ணிக் கல்வெட்டு மூலம் குலோத்துங்கன் கார்த்திகைக் கேட்டையில் முடிசூடிய விபரம் தெரிகிறது. ஒரு முக்கத்தலவை 'சோழிய நாழி' என்று குறிக்கப் பெறுகிறது.

கொங்குப் பாண்டியர்

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1250-1284) தன் தம்பி வீரபாண்டியனை கொங்கு நாட்டு அரசனாரக்கினான் என்று திருவரங்கம் கல்வெட்டுக் கூறுகிறது. (தெ.இ.க.தொகுதி 24-எண் 197). வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், குலசேகரன் ஆகிய மூன்று கொங்குப்பாண்டியர் கல்வெட்டுக்கள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. ஈரோடு, கொடுமுடி, சிவகிரி, முருங்கத்தொழுவு, அகிலாண்டபுரம் கீரனூர், அத்தானி அந்தியூர், அனுமன்பள்ளி ஆகிய ஊர்களில் கொங்குப் பாண்டியர் கல்வெட்டுக்கள்

உள்ளன. ஈரோடு கல்வெட்டில் அவ்வூர் மூவேந்தசோழச் சதுர்வேதி மங்கலம் என்று குறிக்கப் பெறுகிறது.

எழுநூத்திமங்கலம் குளம் "வரகுணன்" என்று அழைக்கப்படுவதால் முற்காலப் பாண்டியர் கொங்கு நாட்டில் செய்த திருப்பணி தெரிகிறது. கத்தாங்கண்ணியில் உள்ள உம்மத்தூர்த் தலைவன் நஞ்சரையர் கல்வெட்டில் "திரிபுவனத்து இராசாக்கள் தம்பிரானார் பராக்கிரம பாண்டிய தேவர் திருமகனார் இராகுத்தப் பெருமாள்" அங்கு நிர்வாகம் செய்ததாகக் கூறப்படுவது அரிய செய்தியாகும். அவர் தென்காசிப் பாண்டியர் ஒருவரின் மகனாக இருக்கலாம்.

விசய நகரர்

அறச்சலூர், ஈரோடு, சிவகிரி, அகிலாண்டபுரம், கீரனூர், நத்தக் கரையூர், மடவிளாகம், மருதுறை, பவானி ஆகிய ஊர்களில் விசயநகர அரசர் கல்வெட்டுக்கள் உள்ளன. முதலாம் தேவராயர், மல்லிகார்ச்சுனராயர், இரண்டாம் தேவராயர், கிருஷ்ண தேவராயர், அச்சுதராயர், இராமராயர் கல்வெட்டுக்கள் உள்ளன. பாலயதேவமகாராசா, கொண்டம ராசர், அண்ணரய்யன், கோவிந்தராயர் போன்ற விசயநகர ஆட்சிப் பிரதிநிதிகள் குறிக்கப் பெறுகின்றனர். மதுரை நாயக்கர்கள் இவர்களின் 'காரியத்துக்குக் கர்த்தர்' என இரண்டு கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றனர்.

போசளர்கள்

அறச்சலூர், ஈரோடு, சிவகிரி, கத்தாங்கண்ணி, பாப்பினி, பட்டிலூர் ஆகிய இடங்களில் போசள மூன்றாம் வீரவல்லாளன் கல்வெட்டுக்கள் மட்டும் காணப்படுகின்றன. அறச்சலூர்க் கல்வெட்டொன்று கீழிலிருந்து மேல் நோக்கிப் படிக்கும் அரிய நிலையில் உள்ளது. ஒரு ஈரோட்டுக் கல்வெட்டில் பூந்துறை நாட்டார் வெள்ளோட்டில் கூடி திண்டல் கிராமத்தை ஈரோடு சிவன் கோயிலுக்கும் கொடையாக அளித்துள்ள செய்தி உள்ளது.

கத்தாங்கண்ணிக் கல்வெட்டில் திருவெம்பாவை, திருவாதிரை விழாக்கள் நடைபெற்றமை கூறப்படுகிறது. போசளத் தண்டநாயக்கன் பாப்பினிக்கு 'கொங்கரமாரி மாதவ நல்லூர்' என்று பெயரிட்டு டணாயக்கன் கோட்டை மாதவப்பெருமாள் கோயிலுக்கு அவ்வூரைக் கொடையாக அளிக்கச் செய்துள்ள செய்தி சொல்லப்படுகிறது.

மதுரை நாயக்கர்கள்

ஈரோட்டில், மதுரை நாயக்கர் காலக் கல்வெட்டு உள்ளது. ஈரோட்டில் வீரப்பநாயக்கன் வீரவெங்கடபதி ராயரின் பிரதிநிதி என்று தன்னைக் குறித்துக் கொண்டுள்ளான். நத்தக்கரையூரில் முத்து வீரப்ப நாயக்கர் கல்வெட்டில் விசயநகர இராமதேவ மகாராயர் மேலான்மை அரசராகக் குறிக்கப்பட்டுள்ளார்.

மைசூர் உடையார்கள்

ஈரோடு, சிவகிரி, சத்தியமங்கலம், பவானி ஆகிய இடங்களில் மைசூர் உடையார்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. சிக்கதேவராச உடையார் கிருஷ்ணராச உடையார் ஆகியோர் கல்வெட்டுக்கள் உள்ளன. சிக்கராயர் காலத்தில் நஞ்சராயரும், கிருஷ்ணராச உடையார் காலத்தில் ரங்கராயர், வீரப்பநாயக்கர், திம்மரசய்யன் ஆகியோரும் ஆட்சிப் பிரதிநிதிகளாகக் குறிக்கப் பெறுகின்றனர்.

உம்மத்தூர்த் தலைவர்கள்

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் விசயநகரப் பேரரசு வலிமை குன்றிய காலத்தில் உம்மத்தூர்த் தலைவர்கள் கொங்கு நாட்டில் தனியாட்சி நடத்தினர். அந்தியூரில் நஞ்சராயர் கல்வெட்டும், கத்தாங்கண்ணியில் நஞ்சண உடையார் கல்வெட்டும் உள்ளது. கிருஷ்ணதேவராயர் உம்மத்தூர்த் தலைவர்களை அடக்கிப் பருவதராகுத்தன் என்பவனை ஈரோட்டுப் பகுதிக்கு அரசுப் பிரதிநிதியாக நியமித்துள்ளார்.

கெட்டி முதலிகள்

தாரமங்கலம் கெட்டி முதலியார் பேரரசர்கட்கு உட்பட்டு ஆட்சி செய்தாலும் சிலசமயம் சுயேச்சையாகத் தங்கள் பெயரில் கல்வெட்டுக்களைப் பொறித்துக் கொண்டனர். பவானி, அத்தானி போன்ற இடங்களில் முதலியார் நல்லுடையப்பர் அவர் மகன் இம்முடிக் கெட்டி முதலி ஆகியோர் கல்வெட்டுக்கள் உள்ளன. அத்தானிக் கல்வெட்டில் பெருமாள் தீட்சிதர் என்ற அலுவலரும், பவானிக் கல்வெட்டில் இம்முடிக் கெட்டி முதலியார் மனைவி சின்னம்மையும் குறிக்கப்பெறுகின்றனர். பவானியில் அவர்கள் பல திருப்பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

கிழக்கிந்தியக் கம்பெனி

கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகத்தை மேற்கொண்டவுடன் 1799 முதல் 1804 வரை நொய்யல் வடக்கு மாவட்டத்திற்கு பவானி தலைநகராக இருந்தது. 1804ல் பவானியில் கலெக்டராக இருந்த வில்லியம் கேரோ பவானிக் கோயில் பள்ளியறைக்கு தந்தம் போர்த்த தூரிக்கட்டில் ஒன்றைக் கொடையாகக் கொடுத்தார். அவர் கையெழுத்தும் தந்தத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. 1804 இல் கோவை மாவட்டம் அமைக்கப்பட்டு கோயமுத்தூர் தலைநகரானது.

கோனேரின்மை கொண்டான்

அரசன் நேரடியாகவோ, ஓலை மூலமாகவே கொடுக்கும் கொடைகளில் அரசர் பெயர் குறிக்காமல் கோனேரின்மை கொண்டான் என்று குறிப்பர். கொடுமுடி, கத்தாங்கண்ணி, முத்தூர், ஓலகடம், பட்டிலூர் போன்ற இடங்களில் கோனேரின்மை

கொண்டான் என்று தொடங்கும் கல்வெட்டுக்கள் உள்ளன. கொடுமுடியில் பாண்டிய மன்னனுக்கும் மற்ற ஊர்களில் கொங்குச் சோழருக்கும் உரியதாக அப்பெயர் விளங்குகிறது. கல்வெட்டுக்களில் அதற்குரிய குறிப்பு உள்ளன.

மக்கள் கல்வெட்டுக்கள்

அரசர், அதிகாரிகள் பெயர் இல்லாமல் மக்கள் நேரடியாகத் தங்கள் பெயரில் கொடுத்த கொடையைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் சரி பாதி இத்தொகுதியில் உள்ளன. கொங்கு வேளாளர்கள், வேட்டுவர்கள், ஆசாரியர், வேட்கோவர், முதலியார், வணிகர், கணக்கர், தட்டார், சிவப்பிராமணர் ஆகியோர் கொடைகள் அவற்றில் குறிக்கப் பெறுகின்றன. கொங்கு வேளாளர்களும், வேட்டுவர்களும், ஊராளிகளாகவும் பலர் அரசரால் சிறப்புப் பெயர் அளிக்கப்பட்ட அரசு அலுவலர்களாகவும் இருந்துள்ளனர். வேளாளர் வேட்டுவர், குலப் பெயர்கள் பல குறிக்கப் பெற்றுள்ளன. கொங்கு வேளாளர்களில் ஒரு பிரிவான வடகரைக் கவுண்டர்கள் "நரம்பர்" என்று அந்தியூர்க் கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றனர். ஈரோடு, கொடுமுடி போன்ற ஊர்களில் மக்கள் ஒரே கொடையை சைவ-வைணவ கோயில்கட்கு அளித்துள்ளனர். ஈரோட்டில் காவிரிக்கரை தர்காவிற்கு மைசூர் உடையாரின் அதிகாரிகள் பலர் கொடையளித்துள்ளனர். இது சமய ஒருமைப்பாட்டைக் காட்டுகிறது. வடகரை நாட்டார் காஞ்சிக்கோயில் நாட்டுக் கூகலூர்க் கோயிலுக்கும் பூந்துறை நாட்டார் அரையநாட்டுக் கொடுமுடிக்கும் கொடைகள் அளித்துள்ளனர். பாண்டிய நாட்டு மக்கள் பலர் ஈரோடு மாவட்டத்தில் கோயில்கட்குக் கொடையளித்துள்ளனர். வேளாளர், வேட்டுவர், சிவப்பிராமணர் குடும்பத்துப் பெண்கள் பலர் கொடையளித்துள்ளனர். ஒரு சிவப்பிராமணர் 'நாற்பத்தொண்ணாயிர பட்டன்' என்றும், ஒரு ஆசாரியர் 'சித்திரமேழித்தட்டான்' என்றும் குறிக்கப்படுவது வேளாளரால் அவர்கள் பெற்ற சிறப்புத் தெரிகிறது.

நில அளவு

கொடுமுடிக் கல்வெட்டிலும், ஈரோட்டுக் கல்வெட்டிலும் ஒரு மா நிலம் எவ்வளவு என்று அளவு கூறப்படுகிறது. "பன்னீரடிக் கோலால் ஐநூறு குழிகொண்டது ஒரு மா"என்று கொடுமுடிக் கல்வெட்டிலும்' "இருபத்து நாலடிக் கோலால் இருநூற்று ஐம்பத்தாறு குழிகொண்டது ஒரு மா" என்று ஈரோட்டுக் கல்வெட்டிலும் கூறப்பட்டுள்ளது.

துலுக்கணசாமி

கொங்கு வேளாளர்கள் வழிபடும் கொளாநல்லி பொன்குழலியம்மன் கோயிலில் ஒரு சன்னதியில் உள்ள சுவாமிக்கு "துலுக்கண்ணசாமி" என்று பெயர் கூறப்படுகிறது. அக்கோயிலுக்குக் கொடை கொடுத்த பெருமக்களில் ஒருவர் பெயர் 'துலுக்கண கவுண்டர்' என்பதாகும். இதே போன்று காகம், காஞ்சிக் கோயில் ஆகிய ஊர்களில்

கொங்கு வேளாளர்கள் 'ராவுத்தணசாமி' என்னும் இசுலாமியப் பெரியவரைக் குலதெய்வமாக வணங்கி வருகின்றனர்.

சிற்பிகள் பெயர்

கோயில்களைக் கட்டிய சிற்பிகள் பெயர் மிக அரிதாகச் சில இடங்களில் மட்டும் கூறப்படுகின்றன. பவானிக் கோயிலில்

"இந்த மண்டபம் வேலை பண்ணினது வீரராகவாசாரி தம்பி சேஷாசாரி"

"இந்தத் திருப்பணி முடிச்ச ஆசாரியின் குருவ ஆசாரி மகன் ரங்கப்ப ஆசாரி தம்பி நாராயண ஆசாரி"

என்ற தொடர்கள் கல்வெட்டில் காணப்படுகின்றன. அறச்சலூர்க் கல்வெட்டில் "கோயில் வேலை தட்டான்" என்ற தொடர் காணப்படுகிறது.

புதிய நாட்டு பகுதிகள்

காஞ்சிக்கோயில் நாடும், பூந்துறை நாடும் தனித்தனி நாடுகள். ஆனால் இரண்டு நாடுகள் இணையும் பகுதிக்குக் "காஞ்சித் துண்டம்" என்று பெயர் இருந்துள்ளது. பூந்துறை நாட்டு ஈரோடு காஞ்சித் துண்டத்து ஈரோடு என்று குறிக்கப்படுகிறது. காவிரிக் கரையில் உள்ள கொடுமுடிப் பகுதி அரைய நாட்டைச் சேர்ந்தது. ஆனால் கொடுமுடிக் கல்வெட்டில் அப்பகுதியின் பெயர் 'நற்காவிரி நாடு' என்று கூறப்படுகிறது. கத்தாங்கண்ணி குறுப்பு நாட்டுக்குரியது. கத்தாங்கண்ணிக் கல்வெட்டில்அப்பகுதி 'வீரசோழபுர நாடு' என்று குறிக்கப்பட்டுள்ளது. தென்குறுப்பு நாட்டுக்கு அப்பெயர் வழங்கியுள்ளது.

பிற செய்திகள்

மடவிளாகம், பவானி, ஈங்கூர், பிடாரியூர், முத்தூர் போன்ற இடங்களில் சிறந்த பாடல் கல்வெட்டுக்கள் உள்ளன. ஏறக்குறைய பாதிக் கல்வெட்டுக்கள் கோயில் திருப்பணிகள் பற்றிய பல செய்திகளைக் கூறுகின்றன. 'ஸ்வஸ்திஸ்ரீ' என்று வடமொழி கிரந்த எழுத்துச் சொற்களுடன் 'நன்மங்கலஞ்சிறக்க' என்ற தூய தமிழ்த் தொடர் சில இடங்களில் காணப்படுகிறது. கம்மாளரும், பார்ப்பாரச் சான்றாரும், கைக்கோளரும் சிவபிராமணரும் சில உரிமைகளைப் பெற்றுள்ளனர். கோயிலுக்குக் கம்பு கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. கோயில் நிலத்தை உழுது மேல்வாரம் நெல் கொடுக்க ஒப்புக் கொண்டாலும் 'குளம் எத்தாத நாள்' நெல்லுக்குப் பதிலாகப் புன்செய்த் தானியம் கொடுக்க அனுமதிக்கப்பட்டது. முன்பு இப்பகுதியில் நெல் விளைச்சல் குறைவு என்று தெரிகிறது.

அகிலாண்டபுரத்தில் மூன்று சிறிய குளத்தின் நீரை ஒரு பெரிய குளத்தில் விழச்செய்து பாசன வசதி செய்துள்ளனர். நத்தக்காரையூரில் நொய்யலை அடைத்துப்

புது அணையும் வாய்க்காலும் கட்டப்பட்டுள்ளது. எழுநூத்திமங்கலத்தில் உடைந்த குளம் பழுது பார்க்கப்பட்டுள்ளது. குளப்பாசனம் முழுவதும் கோயிலுக்குக் கொடைகொடுக்கப்பட்டுள்ளது. அறச் செயல்கட்குத் தீங்கு செய்தால் "நரகத்துக்கு நாற்றங்கால் ஆவான்" என்றும் உரிய விளக்கு எரிக்காதவர் "கண்ணும் மண்ணும் இழக்கக் கடவர்" என்றும் அரிய தொடர்கள் காணப்படுகின்றன.

அகிலாண்டபுரம் போன்ற சில இடங்களில் 14 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் அரசன் பெயர் இல்லாமல் சில கல்வெட்டுக்கள் உள்ளன. மூன்றாம் வீரவல்லாளன் மறைவிற்குப் பின் விசயநகர ஆட்சி நிலையாக அமையும் இடைக்காலத்தில் அவை வெட்டப்பட்டவையாக இருக்கலாம் (1341-1380). ஊதியூரில் மாணிக்கி (தேவரடியார்) கோயில் திருப்பணி செய்துள்ளாள். கொளாநல்லிக் கல்வெட்டொன்று 'சிவமயம்' என்று தொடங்கி 'ராமஜெயம்' என்று முடிகிறது. கொங்குவேளாள கவுண்டர்களின் மனைவிமார்கள் 'கவுண்டச்சி' என்று கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளனர். கோயில் பகுதிகளாக சித்திரக்கால், போதிகை, பந்தி, உத்தரம் என்ற பல பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. 1904 ஆம் ஆண்டு காவிரித் தூய்மையைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட முயற்சியை அங்குள்ள காவிரிக்கரைக் கல்வெட்டால் அறிகின்றோம். 1907 ஆம் ஆண்டு தந்தை பெரியாரின் தாயாரும் சிறியபாட்டியும் தங்கள் சேமிப்பைக் கொண்டு ஈரோடு பெருமாள்கோயில் பிரகாரங்களுக்குச் சலவைக்கல் பாவியுள்ளதை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

இறைவன் பெயர், ஊர்ப் பெயர்கள் ஆய்வுக்குரிய பல செய்திகள் இக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

பழைய பெயர்கள்	இப்போது வழங்கும் பெயர்
தலையநல்லூர்	சிவகிரி
கற்றாயன்காணி	கத்தாங்கண்ணி
பெருந்தொழு	முருங்கத்தொழு
கரையூர்	நத்தக்காடையூர்
சதுமுகம்	சதுமுகை
பாற்பதி	பாப்பினி
காங்கயம்	அகிலாண்டபுரம் (தனி ஊர்)
நக்கீசுவரம்	நாகீசுவரம்(சிவகிரி)
குலோத்துங்க சோழ	சொக்கப்பெருமாள் (கத்தாங்கண்ணி)
விண்ணகராழ்வார்	

கறையூர்	கொடுமுடி
அய்யகரம்	அய்யம்பாளையம்
பட்டில்	பட்டிலூர் (பட்லூர்)

இத்தொகுதியில் குறிக்கப்பட்ட வட்டங்களில் உள்ள எல்லாக் கோயில் கல்வெட்டுக்களும் இத் தொகுதியில் இடம் பெறவில்லை. இன்னும் சில ஊர்கள் எஞ்சியுள்ளன. துறை கள ஆய்வு செய்த ஊர்க் கல்வெட்டுக்கள் வெளியிடப்பட்டுள்ளன. பிற கல்வெட்டுக்கள் அடுத்த தொகுதிகளில் வெளிவரும்.

ஈரோடு மாவட்டத்தின் அரசியல், சமுதாய, சமய, பெருளாதார வரலாற்றுக்குப் பெருந்துணை புரியும் இக் கல்வெட்டுக்களின் முதல் தொகுதியை வெளியிடும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறைப் பணி பாராட்டுதற்குரியது. எங்களை இப்பணியில் ஈடுபடுத்திய தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை முதன்மை ஆணையர் முனைவர். சீதாராம் குருமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கட்கும், கல்வெட்டுப் பிரிவுத் தலைவர் முனைவர். சு. இராசகோபால் அவர்கட்கும் துறையிலுள்ள பிறருக்கும் நன்றி உரியதாகும்.

செ. இராசு

ஈரோடு

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1000/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 3 ஆம் நூ.ஆ
ஊர்	:	அறச்சலூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	280 /1961–62
எழுத்து	:	தமிழ்–பிராமி	முன் பதிப்பு	:	கல்வெட்டியல்
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	1

இடம்: அறச்சலூர் மலையில் ஆண்டிபாறை என்று அழைக்கப்படும் சமணர் குகைத்தளத்தில் உள்ள கல்வெட்டு

குறிப்புரை: மணிய் வண்ணக்கன் தேவன் சாத்தன் என்பவன் இசைக்குறிப்பை எழுதி வைத்தான் என்பது கல்வெட்டுத் தரும் செய்தி. தமிழ் – பிராமி எழுத்து வட்டெழுத்தாக வளரத்தொடங்கிய காலத்தில் எழுதப் பெற்ற கல்வெட்டு. தொல்காப்பிய விதிப்படி 'அரையளவு குறுகல் மகரம் உடைத்தே உட்பெறு புள்ளி உருவாகும்மே' (தொல் நூல் மரபு 13,14) என்பதற்கு எடுத்துக்காட்டாக முதல் எழுத்து எகரம் உட்பெறுபுள்ளி பெற்று வந்திருப்பது சிறப்புக்குரியது.

கல்வெட்டு:

1. எழுத்துப் புணருத்தான் மணிய்
2. வண்ணக்கன் தேவன் சாத்தன்



த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1001/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 3 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அறச்சலூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	281,282/1961–62
எழுத்து	:	தமிழ்பிராமி	முன் பதிப்பு	:	கல்வெட்டியல்
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	2,3

இடம்: அறச்சலூர் மலையில் ஆண்டிபாறை என்று அழைக்கப்படும் சமணர் குகைத்தளத்தில் உள்ள கல்வெட்டு

குறிப்புரை: வரலாற்றுச் சிறப்புமிக்க இசைக்குறிப்புக்கள். இவ்வாறு இசை எழுத்துக்களைச் சேர்ப்பதை சிலப்பதிகார உரையாசிரியர் சித்திரப் புணர்ப்பு, வஞ்சணைப் புணர்ப்பு என இரண்டு வகையாகக் கூறியுள்ளார்.

கல்வெட்டு:

அ. த தை தா தை த
தை தா தே தா தை
தா தே தை தே தா
தை தா தே தா தை
த தை தா தை த



ஆ. கை த தை த கை
த கை த கை த
தை த கை த தை
த கை த கை த
கை த தை த கை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1002/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	பவ
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1334
ஊர்	:	அறச்சலூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	278 / /1961-62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வீரவல்லாளதேவர்	எண்	:	4

இடம்: புற்றிடங்கொண்ட நாயனார் கோயில் அதிட்டானப் பகுதி.

குறிப்புரை: அறச்சலூர் கரைய வேட்டுவர் செய்யார் பல்லவராயன் திருநிலை கால், படி ஆகியவை செய்வித்தமை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸோஜஸ ஸுஜஸவ வீரவல்லா[ஸ] தேவர் ஸூயிவிராஜ்ஜ பண்ணியருளா னின்ற பவ ஸம்வது[ஸ]ரத்துத் தைய் மாதத்தொரு நாள்
2. மேல்கரைப் பூந்துறை நாட்டு அறைச்சலூரில் கறைய வேட்டுவரில் செ[ய்]யான் பல்லவராயனேன் இவ்வூரி[ல்] உடையார் புற்றிடங்கொண்ட நாயனார்கோ
3. யிலில் திருக்கட்டளையில் திருநிலை காலும் படியும் செ[ய்] வித்தேந்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1003/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அறச்சலூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	279/1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	5

இடம்: புற்றிடங்கொண்ட நாயனார் கோயில் அதிப்பினப் பகுதி.

குறிப்புரை: ஐந்துவகைக் கம்மாளர்களில் தட்டார் பிரிவைச் சேர்ந்த இருவர் கொடை கொடுத்ததை

கல்வெட்டு:

அ. 1. ெ[ரள]வுதிறி வருஷ[ம்*] தேவநாத . . .

2. . . . பிள்ளை கோயி[ல்] வேலை தட்டான்

ஆ. 1. மகன் தேவ தட்

2. டான் த[ம்] மம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1004/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அறச்சலூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வீரவல்லாளன் III	எண்	:	6

இடம்: அறச்சாலையம்மன் கோயில் படிக்கட்டுக் கல். இக்கல்வெட்டு இப்போது ஈரோடு கலைமகள் அருங்காட்சியகத்தில் உள்ளது.

குறிப்புரை: கல்வெட்டினைக் கீழிருந்து மேலாகப் படிக்க வேண்டும்.

கல்வெட்டு:

1. வர்
2. ாள தே
3. வல்ல
4. க வீர
5. ஞ் சிறக்
6. ங்கல
7. நன் ம
8. ன்மம்
9. ண் ட த
10. யன் க
11. லவ ரா
12. பல்

இதுபோன்ற அமைப்பில் ஒரு கல்வெட்டின் பகுதி ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் திங்களூர் சந்திரபுரீசுவரர் கோயிலிலும் உள்ளது.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : -**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 1560 (?)
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 16 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அறச்சலூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	-
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கோ. சா .1:238*
அரசு	:	விசயநகரம்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	கோவிந்தராயர்	எண்	:	7

இடம்: அறச்சலூர் புற்றிடங்கொண்டீசுவரர் கோயில்

குறிப்புரை: அறச்சலூர் புற்றிடங்கொண்டீசுவரருக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

சொஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரனாகிய ஸ்ரீமது கோவிந்தராயர் பூந்துறை நாட்டில் புற்றிடங்கொண்டீசுவர தம்பிரானுக்கு தர்ம பரிபாலனம் . . . . கலியுக செகாத்தம் ஹூ சூருாசுயி மேல் செல்லா நின்ற செய ஹூ அப்பிசி மீ ரு டெ திங்கள் கிளமை அசுவனி நெகூஷத்திரம் கூடிய சுபதினத்தில் பூந்துறை நாட்டில் அறச்சலூர் புற்றிடங்கொண்டீஸ்வர சுவாமியாருக்கு ஊசிபாளையத்துக்கு வடக்கு நாகமலைக்கு தெற்கு வெள்ளை பிள்ளையார் கோயிலுக்கு மேற்கு யிந்த நாலு பாங்கு யெல்லையும் சூலக்கல்லுப் போட்டு சாசனம் யெழுதி குடுத்தது யிந்த தற்மத்தை பரிபாலனம் பண்ணின பேர்கள் அசுவமேத யாகம் பண்ணின பலனை அணுபவிப்பார்கள் யிந்த தற்மத்தை அசுத்தம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையில் காறாம் பசுவை கொன்ற தோஷம் போவ கடவனாகவும்

---

*தெ.இ.கோ.சா.1:238 என்பது தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் தொகுதி1 எண்:238 என்பதைக் குறிக்கும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : –**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 1560 (?)
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 16 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அறச்சலூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கோ. சா .1: 237
அரசு	:	விசயநகரம்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	அச்சுததேவராயர்	எண்	:	8

இடம்: அறச்சலூர் பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டு.

குறிப்புரை: அறச்சலூர் புற்றிடங்கொண்டீசுவரருக்கு நிலம் கொடையாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

சுவஷ்த்தி ஸ்ரீமன் மகாமண்டலேசுவரராகிய அச்சுதராயசுவாமி காரியம் பரிபாலனம் . . . . . கலியுக செகாத்தம் ஹூ சூருாசுய மேலே செல்லாநின்ற செய ஹூ சித்திரை மீ யிரு ஏ புதவாரமும் புனற்பூச நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் பூந்துறை நாட்டு அரசலூரில் புற்றிடங்கொண்ட ஈசுவரலிங்க நாதருக்கு மண்டப்பாறைக் காட்டுக்கும் தெற்கும் பள்ளக் காட்டுக்குக் கிளக்கு புதுப்பாளையத்துக்குப் போற இட்டேறிக்கு வடக்கும் ஊசிப்பாளையத்து பாசபறுப்புக்கு போர இட்டேறிக்கு குளனாங் கல்லுக்கு கீழ்புரத்து மார்க்கம் யிந்த நாற்பாங்கு யெல்லையும் கல்லு சாசனம் போட்டுக் குடுத்தது யிந்த தற்மத்தை பரிபாலனம் பண்ணினவர்கள் அசுவமேத யாகம் பண்ணின பலனை அனுபவிப்பார்கள் யிதை அயிதம் பண்ணின பேர்கள் காறாம்பசுவைக் கொன்ற தோஷம் பிறாமணனை கொண்ண தோஷம் போவ கடவானாகவும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 81 /2005**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	காளயுக்தி
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அனுமன்பள்ளி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	224 / 1964
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	1

இடம்: அனுமீசுவரர் சிவாலயம். சுப்பிரமணியர் சந்நதி முன் நடப்பட்டுள்ள கல்.

குறிப்புரை: வீரண கவுண்டர் மகன் பச்சையாக் கவுண்டன் சிவன் கோயிலில் சுப்பிரமணியர் கோயிலைக் கட்டினார்.

கல்வெட்டு:

1. காலையுக்தி வருஷம் அற்பசி மாதம்
2. சுப்பிரமணிய சுவாமியார் சன்னதி வீரண கவுண்டன் ம
3. கன் பச்சையாக் கவுண்டன் உபையம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 82/2005**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	8
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1288
ஊர்	:	அனுமன் பள்ளி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	225 / 1963-64
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
அரசு	:	கொங்குப்பாண்டியர் ஊர்க் கல்வெட்டு			
மன்னன்	:	சுந்தரபாண்டியன்	எண்	:	2

இடம்: அனுமீசுவரர் கோயிலில் சண்டிகேசுவரர் ஆலய வடசுவர்.

குறிப்புரை: ஆமூர்நாட்டு வெள்ளூரான கோதண்டராமபுரத்து வியாபாரி மிலட்டூருடையான் பெரிய நாயன் இனியாரன் அனுமீசுவரர் கோயிலில் சண்டிகேசுவரரை எழுந்தருளச் செய்து அவர்க்குக் கோயில் கட்டி சந்தியாதீபம் வைத்தான். சிவாலயத்து மண்டபத்தில் திருநிலைகாலும் படியும் செய்வித்தான்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு அ ஆவது சண்டேசுர நாயனாரையும் ஏறியருள
2. ப் பண்ணி இவற்குக் கோயிலுஞ்செய்வித்து இவற்குத் திரு[விளக்கு] சந்திராதித்தவரை [ஒ]
3. ரு விளக்கிடக்கடவதாக கோயிற் காணியு[டைய] சிவபிராமணர்களில் கவுசிய தே
4. காத்திரத்து பிள்ளன் பொ[ந்ந]ம்பல [நம்பி] மகன் திருவம்பல
5. நம்பி வசங்குடுத்த அச்சு ஒந்றுங் குட[ங்] கொண்டு கோயில் புக்காரெல்
6. லாம் இவிளக்கிடக் கடவதாகவும் உடையா[ர்] மண்டபத்தில் திருநிலைகாலும்
7. படியும் ஆமு[ர்] நாட்டு வெள்ளூரான கோதண்டராமபுரத்து வியாபாரி
8. மிலட்டூ[ர்] உடையான் பெரிய நாயந்
9. இநியா[நே]ந் இவை எந் தந்மம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 83/2005**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	பிரமாதி
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அனுமன்பள்ளி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	3

இடம்: சின்னம்மன் பெரியம்மன் கோபுரக் கலசங்கள்.

குறிப்புரை: அனுமன் பள்ளிக் காணியாளரில் வேமாண்டக் கவுண்டர் பேரனும் செல்லப்பகவுண்டர் மகனுமான பூசாரி செல்லப்பன் பலருடைய உதவியைப் பெற்று இரண்டு விமானக் கலசங்கள் செய்து வைத்தார்.

கல்வெட்டு :

முதல் கலசம்

1. பிறமாதி ௵ ஆடி ௴ ௰௬ உ அரச்சலூருக்குச்
2. குச் சேந்த னாச்சி வலசிலிருக்கும் அனுமன்பள்ளிக்
3. காணியாளன் வேமாண்டக்கவுண்டன் மகன்
4. செல்லப்பக் கவுண்டன் மகன் பூசாரி செல்லப்பன்
5. பலர் உபகாரமாகப் பணம் வாங்கி அனுமன் பள்ளி
6. சின்னாயி பெரியாயி கோவிலுக்குக் கலசம்
7. வச்ச உபயம் யிந்த பணம் குடுத்தவர்களெல்லாம்
8. சுகமாயிருக்க வேனும் சின்னாயி பெரியாயி
9. துணையாயிருந்து லட்சிப்பாள் யிந்த தருமத்தை
10. ஆறாகிலும் விஹாதம் பண்ணினால் காசியில்
11. கங்கைக்கரையில் காறாம்பசுவைக் கொன்ற
12. தோஷத்தில் உ

இரண்டாம் கலசம்

1. பிறமாதி ௵ ஆடி ௴ ௰௬ உ சின்னாயி
2. பெரியாயி கோவிலுக்குக் கலசம் உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 84/2005**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	அட்சய
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 ஆம்நூ.ஆ.
ஊர்	:	அனுமன்பள்ளி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	4

இடம்: சின்னம்மன் பெரியம்மன் கோயில் குத்துக் கல்.

குறிப்புரை: அனுமன்பள்ளி சின்னம்மன் பெரியம்மன் கோயிலில் காளியண கவுண்டர் செய்த திருப்பணி குறிக்கப் பெறுகிறது. அனுமன்பள்ளி ராய அனுமன்பள்ளி என்று குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. அகூஷ
2. ய வருஷம்
3. வைகா
4. சி மாதம் யிந
5. ராய அநு
6. மன் பள்ளி
7. காளியன
8. கவுண்டன்
9. சின்னாயி
10. பெரியாயி
11. கோவிலுக்கு
12. உபயம் ெ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 85/2005**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 நூ.ஆ.
ஊர்	:	அனுமன்பள்ளி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	5

இடம்: சின்னம்மன் பெரியம்மன் கோயில் கொடிக்கம்பம்.

குறிப்புரை: அனுமன்பள்ளிக் கிராமம் குடியாம்பாளையம் மணியகாரர் வீடு ராமசாமிக்கவுண்டர் மகன் செங்கோட்டையன் சின்னம்மன் பெரியம்மன் கோயிலில் கொடிக்கம்பம் செய்து வைத்தார்.

கல்வெட்டு:

1. அனுமன் பள்ளிக் கிராமம் குடியாம்
2. பாளையத்தில் இருக்கும் மணியகாரர்
3. வீடு ராமசாமிக் கவுண்டர் மகன்
4. செங்கோட்டையன் சின்னம்மன்
5. பெரியம்மனுக்கு கொடிக்கம்பம்
6. உபையம் ஏ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 86/2005**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அனுமன்பள்ளி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	223/1963–64
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	6

இடம்: அனுமீசுவரர் கோயில்.

குறிப்புரை: சிவாலயக் கொடை குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. னார் அகத் து
2. . . .
3. . . . ய சாத்தநுக்கு . . .
4. . . . த் தரைய. . .
5. . . . வை . . .
6. . . . தின் . . . இ
7. ப்படி சம்மதி . . .
8. ஊ. . . ஊரா. . . னார் திரு . . .
9. முடையாற்கு சிலாசாத
10. நம் பண்ணி குடுத்தோ
11. ம்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : --

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	4
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி.10ஆம் நூ.ஆ.
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	12 / 1891
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு		:தெ.இ.க.தொ.4: 413
அரசு	:	சேரர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	இரவிகோதை கலிமூர்க்கன்	எண்	:	1

இடம்: திருத்தொண்டீசுவரர் கோயில் தென்சுவர்.

குறிப்புரை: வெள்ளாளன் பிள்ளர்களில் சொக்கன் விக்கிரம சோழியரையன் மகனுக்கு அக்கன் சோமன் மாமணியாழ்வான் என்று பெயர் வைத்தபோது அவன் பேருடைச் சிறப்புக்கு அரசன் நிலம் கொடுத்து விளைச்சலில் நான்கில் ஒன்றை ஈரோடு கோயிலுக்குக் கொடுக்க ஆணையிட்டான்.

கல்வெட்டு:

1. கோவிரா[ச*]கேசரிபற்மரான திரு ஈவனச்சக வத்திகள் ஸ்ரீ இரவிகோதைய
2. ான கோக்கலிமூக்கற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு நா
3. லாவது பூவாணியநாட்டு ஆவணிபேரூரில் வெள்ளாளன் பிள்ளர்களில் சொக்க
4. ன் விக உசோ[ழி]யரையன் தன் மகன் அக்கன் சோமன் மாமணியாழ்வார் திருநா
5. மஞ் சாத்தினமையா[ற் ே] பருடைச் சிறப்பு இவனுக்கு ஊற்கு வடக்கே தாழ்வு குளங் கட்

தெ.இ.க.தொ.4:413 என்பது தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி–4 எண்:413 என்பதைக் குறிக்கும்.

6. டிக்கொண்டு புன்புல நன்புலமாக்கிக் கொள்வானாகவும் இக்குளத்திற் பயிர் யாதொன்றும்

7. முற்சூட்டுன் தாநே அனுபவிப்பானாகவும் ஈரோட்டில் ஆளுடையார் தொண்டிஷ்ஷ[ஶ]முடையா

8. ற்க்கு நா[லி] லெ[ா*]ன்று யிறை போகம் குடுப்பானாகவும் மற்றும் [எ] ழுவன முளைப்பன தெ

9. ங்(க்)கு பனையும் தன் மக்க[ள்*] மக்கள் அனுபவிப்பானாகவும் (நா) நான்கெல்லைக்கு உட்பட்ட கல்

10. லுங் காஞ்சணமும் முற்றுக் கழியிறை உள்ளதும் தாநே அனுபவிப்பானாக உதகம் பண்ணி

11. க்குடுத்தோம் யிது மூந்று நியாயற்கும் ·ஈ·ஈகெஷ யிது விலங்கல் செய்து யிறங்கல் பண்

12. ணிநான் வழி யேழச்சமறு[ப்*]ப உதகம் பண்ணிக் குடுத்தோம் யிவூரில் நான்கெல்லையாவது வடக்

13. கு சிறுபாடிக்குளத்து தென்னிளன் தலையும் கிழக்கு வேப்பம்பாடியும் தெற்கு ஆயத்தார் மடையு

14. ம் மேற்க்கு ஒழுகுகறடும் இன்னான்கும் யெல்லையாவதாகவும் யிவூர் நாலு மன்றாட்டாலுள்ளது

15. தானெ அனுப(ப்பாநாச)விப்பா நாசமுறுவான் இவை கோக்கலிமூக்கனேன் என்னெழுத்து இவை பெருமாள்

16. [அ]த்[தி]க[ார]ஞ்செய்வா(ா)ற் காடுவெட்டியேன் இவை என்னெழுத்து பெருமாள் தினைக்களத்தாரில் முனையதரை

17. யனேன் இவை என்னெழுத்து [||*]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : –**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சகம் 1511[1]
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1589
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	13 / 1891
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.க. தொ. 4:414
அரசு	:	விஜயநகரம்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வேங்கடபதிராயர்	எண்	:	2

இடம்: திருத்தொண்டீசுவரர் கோயில் தென் சுவர்.

குறிப்புரை: மதுரை நாயக்க மன்னர் வீரப்பநாயக்கர் ஈரோடு சிவன் கோயிலுக்கும் பெருமாள் கோயிலுக்கும் பொதுவாகக் கொடையளித்தார்.

கல்வெட்டு:

1. ஶுபஸ்து[||*] ஸ்ரீ[||*]உ ஸ்ரீ வீரவேங்கடபதிராயர்[வூ]மிவீ ராஜ்யம் பண்ணி அருளாநின்ற கலியு[க]
2. ஶகாப்தம் சூருாயக மேற் செல்லாநின்ற ஸவ்யதாரி வருஷம் சித்திரை மீ கூ உ பூறுவப
3. க்ஷத்துப் பஞ்சமியும் மூலநக்ஷத்ரமும் ப்ரு[கு]யோமமும் ஸாலவாகரணமும் பெற்ற சுக்கிர
4. வாரநாள் மேல்கரைப் பூந்துறைநாட்டுக் காஞ்[சி]த்துண்டத்து ஈரோட்டில் தொண்டீசுரமுடைய தம்பிரா
5. நாற்கும் பள்ளிகொண்ட பெருமாளுக்கும் வீரப்பநாயக்கர் அய்யன் தன்மமாக ஹவிஸு ஸ
6. லி அற்சனைக்கும் திருநாள் திருப்பணிக்கும் நடப்பதாக அணைக்கீழ் நீற்பாச்சல் கமலபுஷ்க[ரி]ணியான

7. சொக்கு[றோ]ணியின் கீழ் நிலம் ரு ~ க ப க்கு தானமாநூஃ ஹட்டவூத்தி நிலம் கூபந க்கு மாவடை மரவடை உ

8. ள்பட நிலம் சயஉபா இந்நிலத்திலுண்டான ஸவ்ர ஸ்வ[தந்த்ரங்க]ளும் சகல ஆதாயமு[ம்*] ஸவ்ர ஊநூமாகத் தொ

9. ண்டீசுரமுடையார் பள்ளிகொண்டபெருமாள் சன்னதியிலே நல்ல பிறப்பாபிள்ளையும் பூந்துறைநாட்டு நாட்டவ

10. ருெ[ம]ன ஊரரவூவ்வூஊக [த]ாரைவாத்துக் குடுத்தொம் இந்தத் தன்மம் சந்த்ராதித்தவரையும் நடப்பதாகக் க

11. ல்வெட்டிக் குடுத்தபடியினாலே யிந்தத் தன்மத்தை வில[க்*]கின பேர்கள் ெ[க]ங்கைக் கரையிலே காராம்பசு

12. வையும் பிராமணனையும் கொன்ற தோஷத்திலெ போகக்கடவராகவும் யிந்தத் தன்மத்தை உண்டுபண்[ணி]

13. [ந]டத்தினபேர்கள் சுவாமியார் திருவுளத்தினாலே சகல அயி ஸ்வரியங்களும் பெறவும் இப்படிக்குத் தானக்கணக்கான[2]

---

1. சகம் 1511 என்பது கலி 1511 என்று கல்வெட்டில் உள்ளது.
2. கல்வெட்டு முடிவுபெறவில்லை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : –**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சகம் 1263
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1341
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	14 / 1891
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.க.தொ.4:415
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வீரவல்லாளன் III	எண்	:	3

இடம்: திருத்தொண்டீசுவரர் கோயில் மேற்கு மற்றும் தென் சுவர்கள்.

குறிப்புரை: பூந்துறை நாட்டுச் சபையார் தங்கள் நாட்டு வெள்ளோட்டில் கூடி திண்டல் என்ற ஊரை ஈரோடு தொண்டீசுவரர் கோயிலுக்குக் கொடையாக அளித்தனர். அவ்வூர் வரிகள் எல்லாம் கோயிலுக்கு கொ்டுக்கப்பட்டன.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி[॥*] ஸ்ரீஉசுப்ரதாப சக்ரசதி ஹொஜஐ ஹுஜபெஉ வீரவல்லாளதேவர் [ப்ர]ஜிவி ராஜ்யம்பண்ணி அருளாநின்ற சகவருஷம் ௬௨௱௬௰௨ ண்டின்மேல் செல்லாநி[ன்*]ற விக்ரம ஸம்[ங்] வற்ஸரத்து ஆவணிமீ ௰௬௨ அம[ர]பக்ஷத்து பஞ்சமி[யு*]ம் நாயிற்றுக் கிழமையும் பெற்ற அ[ஶ்வ]தி நாள் பூன்துறைநாட்டு நாட்[ட] வரோம் எங்[க*]ள் நாட்டில் வெள்ளே[ா]ட்டில் நிறைவற நிறைந்[து] குறைவறக் கூடி வாட்டம் இன்றி[க்] கூட்டம் பெருக எங்கள் நாட்டில் காஞ்சித்துண்டத்து ஈரோட்டில் நா[ய]னார் தொண்டக[ந]ா[யி]னாற்கு நாங்கள் உதகம்பண்ணிகு[டு][த்*]த [ஊராவது] எ[ங்]கள் நாட்டில் திண்டல் இவ்வூர் நான்கெல்லைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை மேநோக்கிய மரம் கீழ்நே . . .

2. குட்டம் உடும்போடி ஆமைதவழப்பட்ட கற்றுபுற் போகாமுற்றூட்டும் இவ்வூரில் கடைமை நிச்சயிப்பும் காணம் எண்ணை நெய் காத்திகைப் பச்சை திருமுன்[க]ாட்[சி] நல்லெருது

நற்பசு கொணிகை விரிமுட்டு தறிஇறை தட்டார்ப் பாட்டம் ஈழெம்புஞ்சை யணிஇடுவான்வரி நத்தவரி பணவாசி கண்கூலி மற்றும் எப்பெய[ற்*] பட்டனவும் கொண்டு இக்கோயிலில் ஸ்ரீஊஹெஶுர கண்காணி செய்வார்களும் தானத்தாரும் இவ்வூர் முதல் கொண்டு அமுதுபடி சாத்துபடி திருமேற்பூச்சு சந்திய[ா தீ]பம் திருவிளக்கு திருப்பணி திருநாட்தேவை அவிஸெலி [சுஷ்ட]ம்(ச)னை நித்த கஊ[ு*]ம்(ம்) பலபடி நிமந்தம் மற்றும் எற்பெயற்பட்டனவும் நடத்தக்கடவர்களாகவும் இப்படிக்கு கல்லிலுஞ் செ[ம்] . . .

3. . . . வும் இப்படி சம்மதித்து இவ்வூர் நாயினா[ர்*] தொண்டகள் நாயினார் திருக்கை மலரில் உதகம் பண்ணிக் குடுத்தொம் பூ[ந்*]துறைநாட்டு நாட்டவரோம் இக்கோயிலில் ஸ்ரீஊஹேஶ்வ[ர*] கண்காணி செவ்வார்க்கும் தானத்தாற்கும் இத்தந்மம் இரக்ஷிப்பாந் பாதம் எங்கள் தலைமேல் இது இறக்குவாந் வழி ஏழச்ச[ம்*] அறுவாந் பன்ஊஹேஶ்வரர் இ

4. . . . [ெ] தாண்டைமாந் எழுத்து இப்படிக்கு வேணாவுடையாந் எழுத்து இப்படிக்கு வெள்ளோட்டில் வீரசோழக்காமிண்டன் எழுத்து இப்படிக்கு இராமனா[த*] தேவர் எழுத்து இப்படிக்கு அதுமந்[த*] பள்ளியில் காங்கேயந் எழுத்து அனுமப்பந் எழுத்து பெருந்தொழு[வந்] பெரியபிள்ளை காமிண்டன் எ[ழு*] த்து பிடாரியூரில் பிள்

5. . . . யூரில் பிறைசூடும்பெருமா(ள்) ளெழுத்து பெருந்துறையில் தொண்டை மாநார் எழுத்து நசையந்நூற் முனையதரையந் எழுத்து ஈரோட்டில் சமையமந்திரி எழுத்து இப்படிக்கு குள[வு]ளக்கி[ல்] சோழ[க]ங்கதேவந் எழுத்து இப்படிக்கு நாட்டவர் சொற்ப்படிக்கு இச்சாதநம் எழுதிநேன் பூந்துறைனாட்டு எழு[1]

1. இறுதியில் சில எழுத்துக்கள் இல்லை.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : –**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	: 22
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:கி.பி. 10ஆம் நூ.ஆ.
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு	
மொழி	:	தமிழ், சமஸ்கிருதம்	ஆண்டுஅறிக்கை	: 15 / 1891
எழுத்து	:	தமிழ், கிரந்தம்	முன் பதிப்பு	: தெ.இ.க.தொ. 4 :416
அரசு	:	சேரர்	ஊர்க் கல்வெட்டு	
மன்னன்	:	இரவிகோதை	எண்	: 4

இடம்: திருத்தொண்டீசுவரர் கோயில் மேற்கு மற்றும் தென் சுவர்கள்.

குறிப்புரை: திருத்தொண்டீசுவரர் கோயிலில் படையல், அர்ச்சனை, திருவிழா ஆகியவை நடத்த இரவிகோதை நிலமும் அதன் வரி வருவாயும் கொடுத்தமை.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ[॥*][1] ரக்ஷத்வநிஸத்வந்வெக்ஷத்ரிய ௌளலி ஶிவா(ஸி)உணி[॥*] ஸ்ரீ வீ ரஹிதுஂமஸ்ய ஜநந்தொஹஸத்ய ஸாயநம்[॥*] ஸ்ரீ கோவி ரவிகோதைக்குத் தன் பல[ம்] நூ[றா]யிரத்தாட்டைக்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற யாண்டு [மேல்] இ[ரு]பத்திரண்டாவது இவ்வாண்டு ஈரோட்டி[ல்*]த் திருத்தொண்டீ ஶ்வரவமுடைய

2. பிடாரற்கு வடகரைநாட்டில் அந்தியூரில் பெருங்குளம் கீழ்பாற் கெல்லை புன்பாழுஞ் சிற்றுளியும் தென்பாற்கெல்லை நீர்க்கிசைந்த நெல் விளை வளவும் மேல்பாற்கெல்லை தேவதானப் புன்புலமும் அதுக்குப் புளியம்பாகப்பட வடபாற்கெல்லை முன்குளமும் பின்குளமும் இவ்விசைந்த ெ

3. பருநான்கெல்லைக்குட்ப்பட்ட நிலமும் மேனோக்கிய மரமுங் கீணோக்கிய கிணறும் உடும்போடி ஆமைதவழு நிலங் கற்றுப்புல்

போகா முற்றூட்டும் திருத்தொண்டீஶ்வர(ம்)முடைய பிடாரற்கு அவிஸ்வி சுஷ்[ர்*]நெ திருநாளுக்கு இத்தந்தஞ் செய்துகுடுத்தேன் கோவிரவிகோதையேன் இப்ப

4. [டி]க்கு காஞ்சி து [ண்]டத்து ஈரோட்டு தாநிக ஶிவ[ஸ்ராஹ்]ணரில் [ஆ] லம்பாய மொத்ரி [ந]யினா நல்லபட்டர் மகந் பாவடைபெருமாள் எழுத்து ஐயந்தம்

5. காத்தானடி எந் தலைமேலது இது இறக்குவான் வழி ஏழச்ச(ம்) மொழியாமலறுவான் இது பன்மாஹேஶ்வரரி[ர*]க்ஷை[॥*]

1. ஸ்லோகத்தின் முன்பகுதி சரியாக இல்லை. ஸ்லோக யாப்பு அமைப்பும் தவறாக உள்ளது. இதனை இவ்வாறு சரிசெய்து படிக்கலாம்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1005 / 2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1276
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	16 / 1891
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.க.தொ.4 :417
அரசு	:	கொங்குபாண்டியர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வீரபாண்டியன்	எண்	:	5

இடம்: அரங்கநாதர் கோயில் மேற்குச்சுவர்.

குறிப்புரை: பள்ளிகொண்ட பெருமாள் கரிய மாணிக்கம் பெருமாள் கோயில்களுக்கு செய முறியான ஆறமாத் தூற்வல்லிச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊர் திருவிடையாட்டமாக வரிவருவாய்களுடன் அளிக்கப்பட்டமை.

கல்வெட்டு:

1. [ஸ்வஸ்திஸ்ரீ] கோவிராசகேசரிபன்மரான திரு ஈவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டியதேவற்கு யாண்டு ய வது பூந்துறை நாட்டு நாட்டவரோம் எங்கநாட்டு ஈரோடான . . .

2. மூவேந்தி[ர]சோழச் சதுவ்வுஹிமங்கலத்து நாயனார் பள்ளிகொண்ட பெருமாள் ஸ்ரீ வைஷ்ணவ கங்காணி செய்வார்களுக்கும் அபிஷேக விண்ணகரெம்பெருமாள் ஸ்ரீகோவிலில் ஸ்ரீ வைஷ்ணவக்காணி **[செயிகுவார்களுக்கும் நம்பிமாற்க்கும் கரியமாணிக்கியாளுவார் ஸ்ரீ கோவிலில் . . . நம்பிமாற்க்கும் இவாட்டை பங்குனி கொள்ளாநல்லியில் யிருந்து நிறைவற நெறைந்து குறைவற கூடி யின்னாள் . .. வுதகம் பண்ணி குடுத்த ஆறாவது யின்னாட்டில் செயமுறியான ஆறமாத்தூற்வல்லி சதுற்வேதி மங்கலமும் நாங்கு யெல்லைக்கி உள்ப்பட்ட நஞ்சை புஞ்சை மேல்னோக்கிய மறமும் கீழ் னோக்கிய கெணறும் பாகமும் பாகஸ்ரீயமும் மட்டும் பெய்பேற்ப் பட்டனவும் குடி னீங்கா திருவிடையாட்டமாக குடுத்தோம் திருவரை

திறவாடையெடுத்து பொப்பு சந்துவிக்கிறம்பேற் முதல் யெளுத்து வினியோகம் திருவாசல் வினியோகம் னல் வெருது னற்ப்பசு காலும் கலமும் . . . வினியோகம்பதி நத்தவறி னாட்டு வினியோக நிமித்தியங்களுக்கும் வுடலாக இவாண்டு முதல் சந்திரறாதித்தற் வுள்ளவரைக்கும் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டி குடுத்தோம் பூந்துறை னாட்டவரோம் இம் முதலில் அமுது செயிதருளி வித்த பிறசாதத்திலே கோவிலில் . . . பிறசாதமும் அமைத்து குடுத்தோம் பூந்துறை னாட்டவரோம் இதற்கும் றெட்சிப்பான் ஸ்ரீபாதம் யெங்கள் தலைமேலே யிறக்கும் . . .] **1

1. இறுதிப்பகுதி பிற்காலக் கட்டடத்தால் மறைக்கப்பட்டுள்ளது. ஆனால் மக்கென்சி பிரதியில் கல்வெட்டு முழுமையாக உள்ளது. **[ ]** அடைப்புக் குறிக்குள் உள்ள பகுதி தென்னிந்தியக் கோயில் கல்வெட்டுக்கள் முதல் தொகுதி 246 ஆம் எண்ணுள்ள கல்வெட்டிலிருந்து இங்கு தரப்பட்டுள்ளது.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1006 / 2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 1449
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1527
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	17 / 1891
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.க.தொ.4 :418
அரசு	:	உம்மத்தூர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வீரசிக்கராயர்	எண்	:	6

இடம்: அரங்கநாதர் கோயில் கிழக்குச்சுவர்.

குறிப்புரை: பள்ளி கொண்ட பெருமாள், திருத்தொண்டீசுவரர் கோயில்களில் திருவிழா நடத்த காலப்புள்ளையான லக்காபுரம் என்ற ஊரினை வரி வருவாய்களுடன் கொடுத்தமை.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ உந்த ராஜபரமெஶ்வரந்த ஸாஷைக்குத்தப்புவராயர் கண்டந்த ஸஜவெட்டை ராயந்த வெண்ணஸக்ரவத்தி ஸ்ரீ வீரசிக்காயர் பூமிவிராஜ்யம் பண்ணி அருளாநின்ற காலத்தில் கலியுகத்தில் செல்லாநின்ற ஶகாப்தம் சூசாசயக மேல் செல்லாநின்ற ப்ர[ெ*]ஊஉத

2. . . . . ம் ஶுக்ரவாரமும் பெற்ற உத்திராடத்தில்நாள் மேல்கரை பூந்துறைநா[ட்*]டு நாட்டவர் காஞ்சித்துண்டத்து ஈரோட்டில் [நிறவ]ற நிறைந்து குறைவறக் கூடி பெருமாள் பள்ளிகொண்டருளிய பெருமாளுக்கும் நயினார் தொண்டீஶ்வரமுடைய தம்பிரானாற்கும் இரண்டு** [பேறுக்கும் . . . யௌவும் திறுனாள் வெச்சங்களுக்கும் சகல வைபோகங்களுக்கும் நடப்பதாக யெங்கள் னாட்டில் சாத்தனூறில்க் காலப் புள்ளையான லக்காபுரம் இவூற் நாங்கெல்லைக்கி உள்பட்ட னஞ்சை புஞ்சை கந்தாயமாக காணிக்கை நல்லெருது நல்ப்பசு

பொன்வரி மக்க மகமை யெப்பேற்ப்பட்ட யெணவும் கைக்கொண்டு . .. இப்படிக்கு கற்ப்பூற போக முட்டூட்டு திருவெளயாட்டம் தேவதானமாக இரெண்டு கோவிலுக்கும் சம பாகமாக இருரெண்டு திருனாளும் சந்திறாதித்தற் வரைக்கும் நடப்பதாக பள்ளி கொண்ட பெறுமாள் தொண்டீசுவற சன்னதியில் இலூற் வுதகம் பண்ணி குடுத்தோம் இப்படிக்கு பூந்துறையான் கையெழுத்து] ** 1

---

1. தொடக்கப்பகுதி பிற்காலக் கட்டடத்தினுள் மறைந்துள்ளது. கல்வெட்டு முற்றுப்பெறாமல் உள்ளது. ஆனால் மக்கென்சியின் பிரதியில் முழுமையாக தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் முதல் தொகுதி எண் 245ல் உள்ளது. அப்பகுதி இங்கு தரப்பட்டுள்ளது.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1007/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம்.நூ.ஆ.
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குபாண்டியர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	7

இடம்: கொங்கலம்மன் கோவில் கோபுர அதிட்டானம். தற்போது கோவிலின் பின்புறச் சுவரில் பதிக்கப் பெற்றுள்ளது.

குறிப்புரை: கொங்கலம்மன் கோயிலுக்கு நிலக்கொடை அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. வரிகள் குறிக்கப் பெறுகின்றன.

கல்வெட்டு:

1. ஸ்ரீ திரிபுவநச்சக்கரவர்த்தி கோனேரிமைகொண்டான் பூந்துறை நாட்டு ஈரோட்டில் ஷேவ . . . கொங்கலம்மைக்கு . . . பூந்துறை நாட்டு உள்ள . . . யில் தானத்தார்க்கு இந்நாச்சியார் . . . டானக்குடி . . . இ[த)ம . . . யாழகட . . . பூந்தோட்டம்
2. இதன் எதிராமாண்டு அமுதுபடி உள்ளிட்ட வெஞ்சன . . . திருப்பணிக்கும் இ . . . இறைபுரவு சிற்றாயம் ஒட்டச்சு எலவை உகவை. . . க்குக் குடுத்தோம் . . . தவரை பாழ்கிடன்த பூந்தோட்டம் . . . பூசை . . . மற்றும் எப்பேர்ப்பட்டனவும் நாட்டில் நான்கெல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்செய்யும் . . .
3. இன்னாள் முதல் . . . ஆடி மாதம் முதல் குடிகொள்ளவும் இவ்வாறு . . . பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரை [செல்வதாக] க்குடுத்தோம் இப்படி சுபஷஸ்து இறையிலியாக . . . நன்செய் புன்செயும் இதுக்கு வரு . . . மா. . . க்கு இவை . . . ருயஉ இவை தொண்டைமானெழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1008/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 922
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	167 / 1910
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	சோழர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	பராந்தகன் I	எண்	:	8

இடம்: அரங்கநாதர் கோயில் கருவறை நிலை.

குறிப்புரை: திருவாய்ப்பாடி நாடு என்னும் இடையர் சபையார் கோயிலில் உள்ள வெண்ணெய்க் கூத்த நாயனாருக்கு ஆராதனை, அமுதுபடி, சாத்துப்படி திருநாள்படி இவைகட்காக குடிக்குப் பணம் அரையும், திருமணத்தின்போது மணமகன், மணமகள் சார்பில் அரைக்கால், அரைக்கால் பொன்னும், சுடுகாட்டு வரியாக குன்றி மஞ்சாடியும் அளிப்பதாகக் கூறினர். (அருகில் புன்னமர நிழலில் கண்ணன் தவழும் நிலையில் அழகிய சிற்பத்தூண் உள்ளது. கண்ணன் ஆயர்பாடியில் வளர்ந்ததால் இடையர் இக்கொடையை அளித்திருக்கலாம்)

கல்வெட்டு:

1. வ்வஷ்டிஸ்ரீ ம
2. திரைகொ
3. ண்ட கோப்ப
4. ரகேசரி பந்மற்
5. கு யாண்டு பதி
6. னைஞ்சாவது
7. ஈரோட்டி[ல்]ப் ப
8. ள்ளி கொண்டா
9. ழ்வார் கோயி
10. லில் எங்கள்
11. வெண்ணைக்[கு]
12. கூத்தர் நாய
13. னாற்கு எழுகரை
14. த் திருவாய்ப்

15. பாடி நாட்ட
16. வரோம் திரு
17. வாராதினை அ
18. முதுபடி சா
19. த்துப்படி தி
20. ருநாட்படி
21. க்கும் குடிஒ
22. ன்றுக்கும் ப
23. ணம் அரை
24. யும் கண்ணா
25. லப் பொன்
26. ஆண் தலை
27. அரைக்கா
28. ல் பொன்
29. னும் பொ
30. ண் தலை அ
31. ரைக் கால்
32. பொன்னு
33. ம் முன்ன
34. ரையில் ந
35. ல்லியும் சு
36. டு காட்டுப்
37. பாட்டம் கு
38. ன்றி மஞ்
39. சாடியு
40. ம் இப்ப
41. டிக்கு
42. சந்திராதி
43. த்தவரை
44. செல்வதா
45. க செம்பி
46. லுஞ்சிலை
47. யிலுஞ்
48. செய்து கு
49. டுத்தோ
50. ம் எழுகரை
51. த்திருவாய்
52. ப்பாடி நா
53. ட்டவரோ
54. ம் இது
55. காத்தான்
56. அடியெ
57. ங்கள்
58. தலைமே
59. லின இது
60. இறக்கு வா
61. ன் வழியே
62. ஏழைச்சம் ஒ
63. ழியாமல்
64. அறுவான்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1009/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	ருத்ரோத்காரி
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1504
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	168 / 1910
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	உம்மத்தூர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வீரராய தாவக்க மாரைய நாயக்க உடையார்	எண்	:	9

இடம்: திருத்தொண்டீசுவரர் கோயில்.

குறிப்புரை: வீரராய தாவக்க மாரைய நாயக்கரால் திருத்தொண்டீசுவரருக்கு தர்மமாக திருப்பணி திருநாள் நடக்க பாலைமேடு குறவன் கரையில் இருபது மா நிலம் வழங்கப் பெற்றதைக் குறிக்கிறது.

கல்வெட்டு:

1. ஸுஹஸ்தி ஸ்வஸ்திஸ்ரீஸ்ரீ வீரராய தாவக்க மாரைய நாயக்க உடையார் ப்ரதிவி ராச்சியம் பண்ணா நின்ற சகாத்தம் [௬௪௱௨௰௬]ச் செல்லா நின்ற றுதிரோற்காரி வருஷம் பங்குனி மாதம் உ௰ரு௨ பஞ்சமியும் புதவாரமும் பெற்ற உரோசனி நக்ஷத்ரமும் கூடின நாள் மேல்கரை பூந்துரை நாட்டு காஞ்சித் துண்டத்தீரொட்டு தொண்டீசுரமுடைய மகாதேவற்கு நம்முடைய தன்ம

2. திருப்பணி திருநாளுக்கும் நடப்பதாக அணைக் கீழ்ப் பாலைமேடு குறவன் கரையில் நிலத்திலிருபத்து நாலடிக் கோலாலே இருநூற்று அன்பத்து ஆறு குழி கொண்டது ஒரு மாவாக இருபது மாநிலமும் தாரா பூறுவமாகச் சன்னதியிலே தாரைவார்த்துக் குடுத்தோம் இந்தத்தன்மம் சந்திராதித்தியவரை நடத்தவும் இந்த நிலத்திலே வெச்ச வி

3. . . . ாம் இந்தத் தன்ம அகிதம் பண்ணிநவர்கள் கெங்கைக் கரையில் காராம் பசுவையும் பிராமணரையும் கொன் . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1010/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சகம் 1449
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1527
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	169 / 1910
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கோ.சா. I :240
அரசு	:	விசயநகரம்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	கிருஷ்ணதேவராயர்	எண்	:	10

இடம்: திருத்தொண்டீசுவரர் கோயில்.

குறிப்புரை: ஒக்கிலியர்களில் ஆதியப்ப கவுண்டரும், மல்லை கவுண்டரும் மகர சங்கராந்தி புண்ணிய காலத்தில் ஒரு நேரத்துப் பூசைக் கட்டளைக்காக 15 குருவராயன் பொன் அளித்தமை கூறப்படுகிறது. கிருஷ்ண தேவராயர் உம்மத்தூர்த் தலைவர்களை அடக்கி ஈரோட்டில் பரவத ராகுத்தனை ஆட்சியராக நியமித்ததை விசயநகர வரலாறு கூறுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீஉந்ம உஹாஉண்டவேஶ்வந்ம ஹரியராயவி[ஹா]டந்ம [ஹா]ஷெ க்குத்தப்புவராயர் ஹண்டன் மூவராயர் ஹண்டந்ம கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் . . . ஹ ண்டந்ம . . . ஈழந்திரை கொண்ட . . . ன்பிரான் . . அ ஶ்வபதி ஜபதி நரபதி நவகோடி நாராயணன் பூவ்வ்வ்ருதக்ஷிண பஸ்ஸிஉ உத்தர ஷத்ருஸமுத்ராயிபதி . . .

2. பவ்வ்ருதராஹுத்தர்க்குச் செல்லா [நின்ற]கலியுக ஶகா[ப்த]ஃ சாலிவாஹந சகாப்தம் ௬௪௩௱௨௰ க்கு மேல் செல்லா நின்ற பிரஜோத்பதி வருஷ தை மீத்தி ஸோமவாரமும் உத்திரட்டாதியும் பூவ்வ்ருபக்ஷத்து ஸப்தஃியும் பெற்ற நாள் கொங்கு மண்டலத்து மேல்கரை நாட்டு காஞ்சித் துண்டத்தில் ஈரோட்டில்[தொண்டீஶ்வர] முடைய தம்பிரானுக்கு மேல் நாட்டில் உம்மத்தூற் சீர்மையில் . . . தியறையில் ஒக்கல மக்களில் ஆதியப்ப கவுண்டன் மல்லை கவுண்டனேன்[இ] . . .

3. பண்ணிக்குடுத்த பரிசாவது யிற்றை நாள் மகர ஸம்கராஜி ஷுண்ய காலத்திலே தொண்டியப்பற்கு ஒரு நேரத்தில் பூஜைக் கட்டளைக்கு யிந்தக் கோயிலில் ஸ்தாநிகன் ஆலம்பாய கோத்திரத்தில் தொண்டர்கள் நயினார் தெம்மைய பிள்ளையும் சிண்ணமந்தியார் தேவேந்திற பிள்ளைக்கும் ஆக யிவ்விருவர் வசம் அன்றாடு வழங்கும் நற்பொன் [குரு]வராயன் [ப] ௰ரு யிப் பொன் பதினஞ்சுக்கும் . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1011 /2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சகம்1737 கலி 4916
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	21.5.1815
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	418 / 1891
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	11

இடம்: கொங்கலம்மன் கோயில் தூரிக்கல்.

குறிப்புரை: இக்கோயிலில் பெண்ணாலி கோத்திரம் தாமேதரப் பிள்ளை மகன்கள் செலம்பண பிள்ளை, ரங்கையம் பிள்ளை, சிதம்பரபிள்ளை ஆகியோர் தூரிக் கல்லும், கருட கம்பமும் கொறடும் கட்டியதைக் கூறுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம்
2. களஉ கலியுகம் சகூகசு
3. இதுக்கு மேல் செல்லா
4. நின்ற யுவ வருஷம்
5. வைய்யாசிமாதம் கூ ட
6. ஆதித்தவார நாள்
7. சுக்கில பட்சம் திரையோ
8. தசியில் சுவாதி நட்சத்திரம்
9. பெற்ற சுபதினத்தில்
10. பூந்துறை நாட்டுக்குச் சேர்ந்த

11. ஈரோடு கொங்கில் அம்

12. மனுக்கு தூரிக் கல்

13. நாட்டினது கருட கம்பம்

14. உத்தராயண புண்ணிய

15. காலத்தில் வச்சது பெண்

17. ணாலி கோத்திரம் தாமோ

18. தரம் பிள்ளை குமாரன்

19. செலம்பணபிள்ளை

20. ரங்கையம் பிள்ளை

21. சிதம்பரம் பிள்ளை

22. உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1012/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 948
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	1967–68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	சேரர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	கோ இரவிகோதை	எண்	:	12

இடம்: கொல்லம்பாளையம் கெஞ்சியான் தோட்டம் இராசப்ப கவுண்டர் மகன் கருப்ப கவுண்டர் நிலத்தில் இருந்தது. (இப்போது ஈரோடு கலைமகள் மேல்நிலைப்பள்ளி அருங்காட்சியகத்தில் உள்ளது.)

குறிப்புரை: கானாட்டு நிலவெட்டியான் தென்னவன் பேரரையன் ஆயின வஞ்சி வேள்தாழி வெள்ளை மணியன் வெள்ளை முரிகலி வெள்ளை கண்ணன் ஆகியோரிடம் பொன் கொடுத்து நிலம் வாங்கி குளம் வெட்டி தாழி ஏரி என்று தன் பெயரைவைத்து ஊரார் வசம் 20 கழஞ்சு பொன் வைத்தான். கழஞ்சுக்குக் கல நெல் வட்டியாக ஆண்டு தோறும் 20 கல நெல் கொடுக்க ஊரார் ஒப்புக் கொண்டனர். இந்நெல் குளம் பராமரிப்புக்காக இருக்கலாம்.

கல்வெட்டு:

1. [ஸ்வ]ஸ்திஸ்ரீ[॥*] கோவி ரவிகோதைக்கு திரு
2. வெழுத்திட்டுச் செல்லா நின்ற யா[ண்டெ]
3. [டந்] நூற்றெழுபது இவ்வாண்டு
4. . . . [ரு]னூர் வாழும் வெள்ளை மணியன்
5. . . . என்னும் வெள்ளை முரிகலி வில்வ

6. . . . ம் வெள்ளை [முரு] கன்னன் முரிய

7. . . . இம் மூவோம் தென்ன

8. . .. ஓர் வழிமேல் எங்கள் வெள்

9. . . . முன்பும் பின்பும் பொன்னறக்

10. . . . மண்ணறக் குடுத்தோம் கா

11. னாட்டிருந்து வாழும் நிலவெட்டியான்

12. [தென்]னவன் பேரரையன் னாயிந வ

13. ஞ்சி வேள்தாழிக்கு அவனும் குளம் தன

14. . . . நட்டூரார் கையில் [இரு]பதின் கழஞ்

15. சு பொன் வைத்தான் கழஞ்சின் வ

16. [ாய்] கல நெற் பலிசையாக ஆண்டு

17. தோறும் [இரு]பதின் கல நெல்லு

18. கை கொண்டு குளம் இவர்க்கு குடுப்பதா

19. க வைத்தான் சந்திராதித்தவற் செல்

20. வதாகத் தென்னவன் பேரரையினா

21. யின வஞ்சி வேள்டாழி வைத்தான் இக்

22. குளம் தாழி ஏரி என்பது இது காத்தா

23. னடி என் தலைமேலன இறக்கினா

24. ன் வழி ஏழெச்சமறுவ்வான் III உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1013/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 13 ஆம் நூ.ஆ.
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	1967–68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	13

இடம்: காலிங்கராயன் காரைவாய்க்கால் அருகில் வழக்கறிஞர் கிருஷ் ணன் அவர்கள் வீட்டருகே சாக்கடையில் கட்டப்பட்டிருந்த கல் (இப்போது கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் உள்ளது).

குறிப்புரை: நீர் வரும் மதகுக் கற்களைக் கண்டம் பிடாரியான் செம்பியன் என்பான் வைத்ததைக் கூறுகிறது. வருபுணலும் வைத்த கல் என்பதால் அருகில் உள்ள காலிங்கராயன் வாய்க்காலோடு தொடர்புடையதாக இருக்கலாம். கண்டம் பிடாரியான் செம்பியன் காலிங்கராயன் பணிகட்கு உதவியிருக்கலாம்.

கல்வெட்டு:

1. . . . னுங் குமரன் வருபுனலும் வைத்த கல்
2. . . . கண்டம் பிடாரியான் செம்பியன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1014/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 4862, சகம் 1683
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 12.6.1761
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	மைசூர் உடையார்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	கிருஷ்ணராசஉடையார்	எண்	:	14

இடம்: ஈரோடு காவிரிக்கரை தர்காவுக்கு முன்பு நடப்பட்டுள்ள கல்.

குறிப்புரை: மைசூர் உடையார்களின் ஈரோட்டுத் தளவாய் ரங்கநாத திம்மரையனும், கந்தாசாரம், அட்டவணை, சேனபாகம், சேருவைகாரர் ஆகியோரும் தர்காவுக்கு வரும் அரதேசி, பரதேசி, பக்கிரிகளுக்கு அன்னமிடவும் ஆடை கொடுக்கவும் 4 மா நன்செய் நிலம் கொடையாகக் கொடுத்தனர்.

கல்வெட்டு:

1. ஸ்ரீ சாலிவாகன சகார்த்தம் சசூா
2. அயிந கலியுக சகார்த்தம் சசூஅா
3. சுயிக்கு மேல் செல்லாநின்ற விசு
4. வருஷம் சேத்ய சுத்தயஸ் வெள்ளிக்கிழ
5. மை சுவாதி நட்சேத்திரம் பெத்த சு
6. பதினத்தில் ஸ்ரீமது ராசாதிராச
7. ராசபரமேசுவரன் பிறதிஷ்
8. டைப் பிரதாப கிருஷ்ணமாரா
9. சா உடையய்யனவர்கள்
10. சீரங்கப்பட்டணத்தில்

11. ரத்ன சிம்மாசன ரூடராய் பிறித்

12. வி சாம்ராச்சியமாளு

13. கிற னாளையில் ஸ்ரீம

14. த் யீரோட்டுத் தள

15. வாய் ஸ்ரீரங்கய

16. நாத திம்மரைசயன

17. வர்கள் கந்தாசா

18. ரம் அட்டவணை சேனை

19. பாகம் சேருவைகார

20. ர் முதலான பேரும்

21. காவேரி ஓரத்திலி

22. ருக்கிற சேகு மசாய்கு

23. சேகு அலாவுதீன் ஸால

24. பு மசீத் தர்மத்து சிலாசா

25. சனம் அப்பணைப் பிறகா

26. ரத்துக்கு எழுதிக் குடுத்த விபரம்

27. அணை ஓபளிக்குச் சேர்ந்த

28. வயிறுபாளைய வதிகரை

29. யில் மாறுகால்க் கரையில் சேர்ந்த

30. பீளமேட்டில் தோப்படியில் மானிய

31. ம் நஞ்சை ச மா நிலம் சித்தக் கிரைய மா

32. னியமாய் அனுபவித்துக் கொ

33. ண்டு அன்னாடகம் அரதேசி பரதே

34. சி பக்கிரியளுக்கு அன்னம் வஸ்த்தி

35. ரங் கொடுத்துக் கொண்டு க

36. ல்லும் காவேரியுள்ள வரை ஆசந்தி

37. ரார்க்கம் சுகமாயிருக்கவும் யிந்தத் த

38. ர்மத்துக்கு ஆராமொருவர் விகா

39. தம் பண்ணினால் காசி

40. கங்கைக் கரையில் கா

41. ராம் பகவைக் கொன்றவனும்

42. தாயைக் கோழ்த்தவன்

43. துலுக்கரானால் மக்காவில்

44. பன்றியைக் கொன்று தின்ற

45. வன் தாயாரு மகள்க் கோழ்த்த

46. வன் பூமியாகாசங்

47. கெடுக்கும் புத்திர சம்பத்தும்

48. இல்லாமல் போமென்றவாறு ஊ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1015/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 5009
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1906 –7
ஊர்	:	ஈரோடு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	15

இடம்: ஈரோடு அரங்கநாதர் கோயில் நுழைவாயில் வலப்புறம் நடப்பட்டுள்ள கல்.

குறிப்புரை: ஈத வேங்கட நாயக்கர் மனைவி சின்னத்தாயம்மாளும், இராம நாயக்கர் மனைவி சென்னம்மாளும் தங்கள் சேமிப்புப் பணத்தைக் கொண்டு அரங்கநாதர் கோயிலில் பிரகாரங்களுக்குக் கடப்பைக் கல் பாவினர். முகப்பில் சங்கு, சக்கரம், திருநாமம் பொறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தந்தை பெரியார் அவர்களின் தாயார் மற்றும் சிறிய பாட்டனார் மனைவி ஆவர்.

கல்வெட்டு:

1. ஸ்ரீ மதே ராமாநுஜாய நம
2. ஈரோடுபேட்டையில்
3. கன்னட தாச பலிஜ
4. ஜாதி தம்ம நாயக்கர் குமா
5. ரர் மண்டி ஈத வேங்கட
6. நாயக்கர் பெண்ஜாதி சின்
7. னத்தாயம்மாளும் மேற்படியா
8. ர் சிறிய தகப்பனார் இற

9. ந்துபோன இராம நாயக்க

10. ர் பெண்ஜாதி சென்னம்மா

11. ளும் சேர்ந்து தங்கள்

12. சிறுவாட்டுத் திரவிய

13. ங்களைக் கொண்டு இந்

14. த ரெங்கநாத ஸ்வாமி ச

15. ன்னதி சுற்றுப் பிரகாரம்

16. பூராவும் கடப்பைக் கற்க

17. ளால் தளவரிசை பாவ

18. ப்பட்ட மேற்படி கைங்கர்ய

19. த்தை பகவத் கோல்

20. லார்த்தமாக சமர்ப்பி

21. க்கப்பட்டது

22. பாகவத பாத தூளி

23. ஈத வெங்கட நாயக்கர்

24. கலியுக ஹு ரு சூசு

25. பிரபவாதி ஹு பிலவ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1016 /2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொடுமுடி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	2841/1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	1

இடம்: காவேரி ஆற்றங்கரையில் உள்ள துண்டுக் கல்வெட்டு.

குறிப்புரை: பெருமக்கள் உள்ளிட்டார் விளக்கைக் காத்து எரிப்பிக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. மாட மதுரைக் கொற்றவாயில் குடியைச் சேர்ந்த தேவர் ஆம்பரநாதப் பெருமாள் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. பதாகவு[ம்] இது காத்து எ[ரி]ப்பிப்பார் இப்பெரு மக்களும் . . .
2. கேப்ப[1] ஸ்வஸ்திஸ்ரீ கோவி ராஜகேசரிபன்மர்க்குச் செல்லா . . .
3. னமாடமதிரைக் கொற்றவாயில்க்குடி தேவராம்பரனாதப் பெருமா[ள்]

---

1. இப்பகுதி கி.பி. 17 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1017 / 2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 16 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொடுமுடி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	285 / 1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	2

இடம்: காவேரி ஆற்றங்கரையில் உள்ள துண்டுக் கல்வெட்டு

குறிப்புரை: பொன்நகர் குறிக்கப்படுகிறது. அமுதுபடிக்கு அரிசி, பருப்பு ஆகிய கொடை கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. ந்தூாதித்தவற் . . .
2. வத்த பொன் நகர்க . . .
3. சஞ்ூாதித்தவற் பெ . . .
4. கலவரிசியும் முதுப்பரு. . .
5. புமுக்கா . . . றும் . . . அக்கற. . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : –**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 16 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொடுமுடி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு		:தெ.இ.கோ.சா.1: 251
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	3

இடம்: –

குறிப்புரை: கொடுமுடி ஆளுடைய நாயனார்க்கும் பெரியதிருவடி நாயனார்க்கும் மாசிமகத் திருநாள் எழுந்தருளல், தபனமாடி அருளல் பெருந்திருவமுது செய்தல் ஆகியவற்றிற்காக கொடுமுடி, திருச்சிற்றம்பல நல்லூர், எழுநூற்றுச் சதுர்வேதிமங்கலம், ஊஞ்சலூர், வல்லிபுறம், வடிவுடைய மங்கலம், அய்யகரம், திருக்காடுதுறை முதலிய எட்டு ஊர்களைக் கொடையாக அளித்தனர். மேல்கரை அரைய நாட்டில் பதினாறு ஊர்கள் அவற்றை நாடு எட்டு, தானம் எட்டு என்று கூறுவர்.

கல்வெட்டு:

1. னாட்டு நழகாவேரி ஆளுந் திறுப்பாண்டிக் கொடுமுடியாளுடைய நாயனாற்கும் பெரியதிருவடி னாயனாற்கும் யெறயிலி தேவஸ்தானமாக உதகம் பண்ணிக்குடுத்த வூறாவது கரையூற் விதறி திறிசித்தம்பல நல்லூறு நன்னாயனாற் திருவெளையாட்டம் யெளுனூத்துச் [சருப்]பேதிமங்கலம் திறுவூஞ்சலூறும் வள்ளிபுறம் வடிவுடைய மங்கையும் அய்யகறம் திறுக்காட்டுத்துரையும் நன்னாயனாற் திறுப்பாண்டிக் கொடுமுடி யாளுடையாறுக்கும் பெரிய திறுவடி நன்னாயனாற்கும் மாசிமகத்திறுவிளா யெழுந்தருளவும் தபனமாடியறுளவும் சனக்காலயிவனை தங்களுக்கு பெறுந்திறுவமுது செயிதறுளவும் சாத்துப்படி திருவாறாதனமும் திறுப்பணிகளும் கொரைவற நடத்திப் போந்தருளவும் இதுக்கு உடலாக

யெப்பெயர்ப்பட்ட பாட்டங்களுக்கும் ஸ்ரீசுந்திற திறுப்பாண்டி மகாதேவற்கும் பெறிய திறுவடி னாயனாற்கும் இவ்வூற்கள் உதகம் பண்ணிக் குடுத்தோம் இவ்வூர் யெல்லை யாவத்துக்கும் திருசூல ஸ்தாபனம் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுவாராகவும்**

** தற்போது கொடுமுடிக் கோயிலில் எல்லாக் கல்வெட்டுகளும் அழிந்து விட்டன. வரலாற்று முக்கியத்துவம் கருதி அங்கு இருந்த ஐந்து கல்வெட்டுக்களும் தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் முதல் தொகுதியிலிருந்து இங்கு பதிப்பிக்கப்படுகின்றன.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : –**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1288
ஊர்	:	கொடுமுடி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கோ.சா.I:252
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	4

இடம்: அம்மன் சன்னதி அர்த்தமண்டபம் பின்புறம்

குறிப்புரை: பாண்டிமண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து மயிலூர் உடையான் எழும் போது முதியான் (எழும்போ தழகியான்) கொடுமுடி இளைய பிள்ளையாருக்கும் (முருகன்) பெரிய திருவடி நாயனாருக்கும் (கருடாழ்வார்) ஐந்து பொன் கொடை கொடுத்து அமுதுபடி, சாத்துப்படி இருவருக்கும் செலவாக்க அளித்த கொடை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. திருபுவன சக்கிறவர்த்தி கோனேரின்மை கொண்டான் பாண்டிய மறான திருப்பாண்டிக் கொடுமுடி ஆளுடைய னாயனாற் கோயில் தானத்தாறுக்கும் பள்ளிகொண்டபெருமாள் கோயில் திருப்பதியாற்கும் தங்கள் கோயில் பெகெதுத்த மத்துக்கும் யாயும் நடத்தும்போது பொன் அஞ்சும் நமக்கு நன்றாக பாண்டிமண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து மயிலூர் ஒடையான் யெளும்போது முதியான் யெளுந்தருளுவித்த யெளய புள்ளையாருக்கும் பெரிய திருவடி னாயனாற்கும் அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் வெஞ்சனங்களுக்கு இரண்டாவதுக்கு யெதிர் ஆண்டு தை மாசம் முதல் தந்தோம் யிப்பொன்னில் ஒரு கூறு யெளைய புள்ளையாருக்கும் ஒரு கூறு பெரிய திருவடி னாயினாற்கும் கணக்கறிந்து போந்த மறிசாதிகளிலே சிலவாக்க இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரைக்கும் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க இவை வெட்சியூர் ஒடையான் எழுத்து ஆண்டு இரண்டாவதுக்கு யெதிராவது வருஷம் னாள் அஞ்சு இவை சுந்தரபாண்டிய காலிங்க றாயன் கை யெழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : –**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1291ஆம் ஆ.
ஊர்	:	கொடுமுடி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கோ.சா. I : 253
அரசு	:	கொங்குப்பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	சுந்தரபாண்டியர்	எண்	:	5

இடம்: கொடுமுடி மகுடீசுவரர் கோயில் அம்மன் சன்னதி முன்புறச் சுவர்.

குறிப்புரை: விதரியான திருச்சிற்றம்பல நல்லூரில் வெள்ளைக் குளம் வரகுணன் அணை நிறையும் காலத்திலும் உடைவு குலைவு பட்டுக் கிடந்தது. அதை அடைத்துத் திருத்தி திருப்பாண்டிக் கொடுமுடியாருக்கும் திருச்சிற்றம்பலநல்லூர் உடையார்க்கும் 20 மா குடி நீங்காத் தேவதானமாகக் கொடுக்கப்பட்டது என்பதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1. திருப்பாண்டிக் கொடுமுடியாளுடைய னாயனாற் தேவஸ்தானம் விதரியான திருச்சிற்றம்பலநல்லூரில் வெள்ளைக் குளம் வரகுணன் நிறையுங் காலமும் உடைவு குலைவுபட்டு இப்புறம் கிடக்கையில் அடைத்து நீர்நிலம் பயிர் செய்யும் அளவில் பன்னீர் அடிக்கோலால் ஐனூறு குழி கொண்டது ஒரு மாவாக திருப்பாண்டிக் கொடுமுடியில் ஆளுடைய நாயனார்க்கும் விதரியான திருச்சிற்றம்பலநல்லூர் நாயனார்க்கும் முற்றூட்டுகையில் நெலம் இறுபது மாவும் திருப்பாண்டிக் கொடுமுடியாருக்கும் விதரியான திருச்சிற்றம்பல நல்லூர் நாயனார்க்கும் இவை யிறையிலிக்குட் பட்ட நிலம் நாலு மாவும் மேல்கரை அரைய நாட்டாருக்கும் நகரத்தாருக்கும் இறையிலி நீக்கி இவ்வூர், குடிநீங்காத் தேவதானமாக திருப்பாண்டிக் கொடுமுடியாருக்கும் விதரியான திருச்சிற்றம்பல நல்லூர் இறையிலி தேவஸ்தானமாக குடுத்தது யாண்டு ஆறாவது நாள் முப்பத்தாறு இவை சுந்தரபாண்டிய காலிங்கராயன் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : –**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 12 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொடுமுடி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கோ.சா. 1 :254
அரசு	:	கேரளர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வீரநாராயணரவிவர்மன்	எண்	:	6

இடம்: கொடுமுடி மகுடீசுவரர் கோயில் கருவறை வடபுறச் சுவர்.

குறிப்புரை: அதிராசராச மண்டலத்துக் காவேரிநாட்டுக் கரையூர் திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவருக்கு மேல்கரை அரைய நாட்டு ஊஞ்சலூரைக் கொடையாக அளித்த விபரம் கூறப்படுகிறது. அரசனின் பிறந்த நாள் பெருந்திரு அமுது செய்விக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ மன் கோ வீர நாராயண இரவிவன்மர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு இருபத்தேழாவது அதிராசராசமண்டலத்துக் காவேரி நாட்டுக் கரையூர் திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர்க்கு இம் மண்டலத்து மேல்கரை அரையநாட்டு ஊஞ்சலூரை யாண்டு இருபத்தேழாவது முதல் திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர்க்கு இறையிலி தேவஸ்தானமாக நாம் பிறந்தநாள் மாசம் தேதி சாதித்தருளவும் மாசி மாதம் திருவிழா எழுந்தருளவும் ஸ்தபனமாடி அருளவும் பலபடி நிவந்தங்களுக்கு பெருந் திருஅமுது செய்தருளவும் யிதுக்கு உடலாக இவ்வூர் இருக்கும் காரைக் கண்டனது துளை நிறை . . . இந்தப் பொன் யெம்பழத்து ஏழும் அஞ்சே மூன்று மஞ்சாடியும் குன்றியும் நெல் முந்நூற்று நாற்பத்தி ஐங்கலனே தூணியும் இவ்வூரில் மற்றும் யெப்பேற்பட்ட பாட்டங்களும் திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர்க்கு குடுத்தோம் யிவ்வூரில் எல்லையாவது கீழ்பாற்கெல்லை எழுகரைக்கும் ஆனங்கூர்க்கும் மேல் படப்புக்கும் குமரி கயத்துக்கும் மேற்கு தென்பாற் [கெல்லை] எட்டுக் கரட்டுக்கும் மன்னாங்காட்டுக்கும் வடக்கு மேல்பாற்கெல்லை அத்திராப் பாளிக்கும் குளுந்த பாறைக்கும் மூசுகரைக்கும் கிழக்கும் வடபாற்கெல்லை புல்லி நல்லூருக்கும் தெற்கு இதற்கே இதை யிவ்வூர் நான்கெல்லைக்கு உள்பட்ட நிலம் யாவதும் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளுவதாகவும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : –**

மாவட்டம் : ஈரோடு ஆட்சி ஆண்டு : 2

வட்டம் : ஈரோடு வரலாற்று ஆண்டு : கி.பி. 1287

ஊர் : கொடுமுடி இந்தியக் கல்வெட்டு

மொழி : தமிழ் ஆண்டுஅறிக்கை : –

எழுத்து : தமிழ் முன் பதிப்பு :தெ.இ.கோ.சா. I :255

அரசு : கொங்குப்பாண்டியர் ஊர்க் கல்வெட்டு

மன்னன் : சுந்தர பாண்டியன் எண் : 7

இடம்: கொடுமுடி மகுடீசுவரர் கோயில் காவிரிகண்ட விநாயகர் கோயில்

குறிப்புரை: பூந்துறை நாட்டவர் கொடுமுடி சிவன்கோயிலில் உலக விடங்கத் திருக்காவணத்தில் கூடிப் பூந்துறை நாட்டு வெம்புறியான கண்டியதேவ நல்லூரைக் கொடுமுடி ஆளுடைய நாயனார்க்குக் கொடையாகக் கொடுத்து மாசி மகம் திருவிழா நடத்த ஏற்பாடு செய்ததைக் கூறுகிறது.இக்கல்வெட்டின் தொடர்ச்சியாக இதே அரசனின் 14 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் ஒரு பகுதி எழுதப்பட்டுள்ளது. சுந்தரபாண்டியனின் 14ஆம் ஆட்சியாண்டில் உளுந்தன் குறிச்சி முடிகொண்ட தேவன் பலத்தியே 4½ மா கொடையாகக் கொடுத்த விபரம் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ மன் திருபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ரெண்டாவது சித்திரை மாதம் உயிச வ னாள் பூந்துறை னாட்டவரோம் நிறைவற நிறைந்து குறைவறக் கூடி திருப்பாண்டிக் கொடுமுடியில் உலக விடங்கத் திருக்காவணத்தில் இருக்கையில் உடையார் திருப்பாண்டிக் கொடுமுடி ஆளுடைய நாயனார்க்கு நாங்கள் உதகம் பண்ணிக்குடுத்த ஊராவது எங்கள் நாட்டு வெம்புறியான கண்டியதேவ நல்லூர் உடையார் திருப்பாண்டிக் கொடுமுடி ஆளுடைய நாயனார்க்கு யிவ்வூர் குடிநீங்கா தேவஸ்தானமாவதாகவும் யிவ்வூர் நாங்கெல்லைக் குள்பட்ட

நிலமாவது நஞ்சை புஞ்சை நாங்கெல்லைக்கு உட்பட்டது மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் நாங்கெல்லைக் குட்பட்ட நிலமும் தேவஸ்தானமாக இவ்ூர்க்கு நடத்திக் கொள்ளுவதாகவும் இவ்வூருடைய திருப்பாண்டிக் கொடுமுடி ஆளுடைய நாயினார்க்கு திருமகம் திருநாளைக்கும் அமுதுபடி சாத்துப்படி பூச்சுப்படி நிமிந்தங்கட்கு எப்பேற்பட்டதுக்கும் உடலாவதாக இவ்ூர் குடுத்தோம் இவ்ூர்க் கடமை குடிமை சிற்றாயம் மன்றுபாடு தெண்டங் குற்றம் தறியிறை னாட்டாற்பட்டி யீளம் புஞ்சை பாசிப்பாட்டம் நல்லெருது நல்லபசு நாட்டுவரி நத்தவரி சயிதமாயி யெப்பேற்பட்டதும் இவ்வூர் நன்னாயனார்க்கு குடுத்தோம் இவ்வூர் நாங்கெல்லையும் திருசூல ஸ்தாபனம் பண்ணிக் கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுவதாகவும் யிவ்வூர்க்கு அடுத்தவரைக்கும் நடப்பதாகவும் இப்படி சம்மதிச்சுக் குடுத்தோம் திருப்பாண்டிக் கொடுமுடி ஆளுடைய நாயினார்க்கு பூந்துறை நாட்டு நாட்டவரோம் இப்படிக்கு பூந்துறை வேளா[ள]ன் நல்பெருமாள் எழுத்து இப்படிக்கு திருப்பாண்டிக் கொடுமுடி ஆளுடைய நாயனார்க்கு நன்மை சாதனம் குடுத்தோம்

அதிராஜராஜமண்டலத்துக் காவேரி நாட்டுக் காரையூர் திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர்க்கு நமக்கு நன்றாக யிம் மண்டலத்து வெங்கால நாட்டு உளுந்தன் குறிச்சியான முடிகொண்ட தேவன் பலத்திலே நாலரை நாலு மாவும் நமக்குப் பதினாலாவது முதல் உதகம் பண்ணிக் குடுத்தோம் யின்னிலம் நாலரை நாலு மாவும் அமுதுபடிக்கு வேண்டும் நிமந்தங்களுக்கு உடலாக குடுத்தேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 250/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	285 / 1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	1

இடம்: பாம்பலங்காரர் கோயில் பட்டிகை வரி.

குறிப்புரை: பாம்பலங்காரர் கோயிலில் கொங்கு வேளாளரில் கண்ண குலத்தார் ஒருவர் மனைவி பெரியம்மாள் பொய்ங்காக் கவுண்டச்சி செய்த திருப்பணி குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு:

1. குழாநிலை கண்ணகுல கோத்திரத்தாருக்கு
2. வாழ்க்கைப்பட்ட பெரியம்மாள் பொய்ங்காக்
3. கவுண்டச்சி உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 251 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கி.பி. 1876
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	2

இடம்: பாம்பலங்காரார் கோவில். விநாயகர் சந்நிதி வடக்குக் குமுதம்.

குறிப்புரை: கண்ணன் குலத்தைச் சேர்ந்த திருமலை கவுண்டர் மகன் கந்தியண கவுண்டர் குளாநிலை சிவன் கோயிலில் கருவறை சோபன மண்டபம் அமைத்தமை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. சாலிவாகன சகாற்த்தம் சூளாசுயஅ கலியுக சகாற்தம்

2. சூசுரா[எ]யஎ செல்லா நின்ற பிறபவ ஙுல வையாசி மீ உயஉ ஒ குளாநிலை அத்த . . . கண்ண குலகோத்திரம் எளையா . . . பண்ணி. . .

3. . . . கவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர் மகன் திரும[லை] கவுண்டர் மகன் கந்தியண கவுண்டர் கெற்பகிறகம் சோபன மண்டகம் உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 252 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 18 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	3

இடம்: பாம்பலங்காரார் கோவிலில் உள்ள தனிக்கல்.

குறிப்புரை: அத்தப்ப கவுண்டன் சொக்கே கவுண்டன் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. . . . பழனிக்கவுண்டன் அத்தப்ப கவுண்டன் . . .
2. கவுண்டன் மகன் சொக்கே கவுண்டன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 253 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சகம் 1750 கலி 4929
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1828
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	4

இடம்: பொன் குழலியம்மன் கோயில் கருவறைச் சுவர்.

குறிப்புரை: அத்தப்பம்மாளையம் கொங்கு வேளாளரில் கண்ணகுல அத்தப்ப கவுண்டர், செங்கோட கவுண்டர் ஆகியோரும் பொய்ங்காக் கவுண்டச்சியும் பொன் குழலி அம்மனை எழுந்தருளச் செய்து கருவறை கட்டியதையும் சுப்பிரமணியரை எழுந்தருளச் செய்ததையும் தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1. சொஸ்திஸ்ரீ சாலியவாகன சகாத்தம் கூளாருய கலியுக சகாத்தம்
2. சகூகூாஉயகூ க்கு மேல் செல்லாநின்ற சறுவதாரி வருஷம் தை
3. மாதம் அ ந்தேதி சோமவாரமும் அஷ்டமியும் அசுபதி
4. நட்சத்திரமும் கூடிய சித்தயோகமும் பவகரணமும் பெத்த
5. சுபதினத்தில் அத்தப்பன் பாளையத்திலிருக்கும் கண்ணகுல
6. கோத்ரம் எளயாக்கவுண்டன் மகன் அத்தப்ப கவுண்டன்
7. செங்கோட கவுண்டன் பொய்ங்காக் கவுண்டச்சி சுவாமி அம்மன்
8. கெர்ப்பக் கிரகம் சுப்பிரமணியர் உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 254/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 4928
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1827
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	5

இடம்: பொன் குழலியம்மன் கோயில் மகாமண்டபச் சுவர்.

குறிப்புரை: கொளாநல்லிக் காணியாளரில் கொங்கு வேளாளரில் கண்ணகுலத் திருமலை கவுண்டர் பொன் குழலியம்மன் கோயில் மகாமண்டபம் உபையமாகக் கட்டியமை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. சிவமயம் கலியுக சகாத்தம் சஷூகூாஉயஅ க்கு மேல்
2. செல்லா நின்ற சருவசித்து வருஷம் ஆடிமாதம் உயஙூ தேதி
3. சோமவாரமும் திருவோணமும் பெற்ற சுபதினத்தில்
4. குழாநிலை காணியாளரில் கண்ணகுல கோத்ரம்
5. சீரங்கக் கவுண்டன் மகன் திருமலைக் கவுண்டன்
6. குழலியம்மனுக்கு மகாமண்டபம் உபையம் ராமஜெயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 255 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சகம் 1756
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1834
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	6

இடம்: பொன் குழலியம்மன் கோயில், அர்த்தமண்டப கிழக்குச் சுவர்.

குறிப்புரை: கல்வெட்டில் கீழே சங்கு வடிவம் பொறிக்கப்பெற்றுள்ளது. குழாநிலை (கொளாநல்லி) குழலியம்மன் கோவிலில் ரெங்கமண்டபம், துலுக்கண்ண மண்டபம் முதலியவற்றை கண்ணன் குலத்தார் பலர் கட்டியமை – கட்டியவர்களின் பெயர்களைக் கல்வெட்டு தருகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விசயஸ்ரீ சாலியவாகன சகாற்த்தம் கூளாருயசு
2. கலியுக சகாற்த்தம் சகூகூாகூயிரு மேல்செல்லாநின்ற
3. செய ஸ்ரு தையி மீ உயகூ க்கு சுபதினத்தில் குழாநிலை குழலி
4. அம்மன் சன்னதியில் ரெங்கமண்டகம் துலுக்கண்ண சுவாமி
5. மண்டபம் உள்பட மேல்படியூர் கண்ண குலகோத்திரமாகிய
6. குடிகள் உபயம் சின்ன கவுண்டர் மகன் . . . எழய கவுண்டன் மகன் நல்ல குட்டியாக் கவுண்டன்
7. மகன் நல்லாக் கவுண்டன் சின்னய கவுண்டன் மகன் சின்
8. னத்தாயம்ம கவுண்டன் மகன் வெள்ளக் கவுண்டன் பெருமாக் கவுண்டன்

9. மகன் சின்னாக் கவுண்டர் மகன் துலுக்கண்ண கவுண்டன்

10. குமர கவுண்டன் மகன் றாமகவுண்டன் மகன் சின்னய்ய

11. கவுண்டன் மகன் வாமலை கவுண்டன் மகன் அல்லாளன் சின்னய கவுண்டன்

12. பண கவுண்டன் மகன் சின்னய்ய கவுண்டன் மகன் குள்ள கவுண்டன் மகன்

13. மாறப்ப கவுண்டன் முத்துக் கவுண்டன் நல்லியா கவுண்டன்

14. நல்லியா கவுண்டன் மகன் நல்ல தம்பி கவுண்டன் மகன் மோகன கவுண்டன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 256/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	7

இடம்: பொன் குழலியம்மன் கோயில் கிழக்குச்சுவர்.

குறிப்புரை: பொன் குழலியம்மன் கோயிலில் வாமலை நல்லாக் கவுண்டன் மகன் மோளை கவுண்டனும், விருப்பாச்சி கச்சிமாபட்டி சீயகவுமாரன் கருப்பக்கவுண்டனும் கிழக்குச் சுவரை அமைத்த விபரம் கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. வாமலை கிருஷ் ணன்மகன் சின்னாகவுண்டன் மகன் நல்லாக்கவுண்டன் மகன் மோளை[கவுண்டன்]

2. விறுப்பாச்சிக்கிச் சேர்ந்த கச்சிமாபட்டியிலிருக்கிற சீய கவுமாரன் கருப்பக் கவுண்டன் . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 257 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	8

இடம்: பொன் குழலியம்மன் கோயில் மேற்குச்சுவர்.

குறிப்புரை: வெங்கம்பூர் பூசாரி வீரப்பன் மகன் குமாரன் அவன் மகன் ஆச்சி குலசெயபீமன் என்பான் குழலியம்மன் கோவில் மேற்குச் சுவரைக் கட்டிக் கொடுத்த விவரம் கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. விய ஹூ காற்த்திகை மீ
2. ய்க தேதி வெங்கம்பூரு
3. . . . குலபூசாரி வீர
4. ப்பந் மகன் குமாரன் மகன்
5. . . . ஆச்சி குல செயபீமன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 258 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 18 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	9

இடம்: பொன் குழலியம்மன் கோயில் குறிஞ்சி.

குறிப்புரை: கண்ணன் குலம் சின்னய்ய கவுண்டன் மகன் இருமடிக் கவுண்டன் என்பான் குழலி அம்மனுக்குக் குறிஞ்சி உபயம் செய்தமை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. விரோதி ௵ ஆனி மீ ௰ரு ௨
2. கண்ணன் குலம் சின்னய்ய கவுண்டன் மகன்
3. இருமடி கவுண்டன் [பொன்]
4. குளலி அம்மனுக்கு [குறுஞ்சி உபயம்]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 259 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 19 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	10

இடம்: பொன் குழலியம்மன் கோயில் மகாமண்டபச் சுவர்.

குறிப்புரை: மணியக்காரச் சின்னய கவுண்டன் மகன் திருமலை கவுண்டன் குழலியம்மனுக்கு மகாமண்டபம் உபையம் செய்தமை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. மணியக்காரச் சின்னிய கவுண்டன் மகன் திருமலை கவுண்டன்
2. குழலியம்மனுக்கு மகாமண்டகம் உபையம் ஸ்ரீ றாமசெயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 260/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி.18 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	11

இடம்: பொன் குழலியம்மன் கோயில் குறிஞ்சி.

குறிப்புரை: செங்கோட கவுண்டர், குட்டியாக்கவுண்டர், ராமகவுண்டர், பெரிய கவுண்டர் முதலானோர் கோட்டை மாரியம்மன் கோவில் குறிஞ்சி கட்டியது கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. வேல்மாரி கவுண்டன்
2. . . .
3. மகன் செங்கோட கவுண்டன் குட்டியா கவுண்டன் செங்கோட கவுண்டன்
4. மகன் ராமகவுண்டன் பெரிய வீட்டுக் [கவுண்டன்]யிவர்கள் . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 261 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சகம் 1760
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1838
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	12

இடம்: கோட்டை மாரியம்மன் கோயில் அர்த்த மண்டபம் கிழக்குச்சுவர்.

குறிப்புரை: கொங்கு வெள்ளாளரில் செங்கண்ணன் குலத்தைச் சேர்ந்தவர்கள் மாரியம்மன் கோவிலில் தூரி, பலிபீடம், தாயார், பூதம் அமைத்தமை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விசய சாலிய வாகன
2. சகாற்த்தம் ௲௭௱௬௰ கலியுக சகாற்பிதம் ௪௲௯௱௩௯௰ [மே]
3. ல் செல்லா நின்ற விளம்பி ௵ தை மாசம் ௰ ௨ திங்கள் கிழமை
4. சப்தமியும் ரேவதி நஸ்சத்திரமும் நாமயோகமும்
5. கீற்தி கிறணமும் பெற்ற சுபதினத்தில்
6. செங்கண்ண குலகோத்திரம் முன்சி திருமலை கவுண்டன்
7. மகன் பெரியண கவுண்டந் மகன் சீரங்க கவுண்டன்
8. மகன் பெருமாள் கவுண்டந் மகன் திருமலை கவுண்டன் மகன் சூரிய
9. கவுண்டன் மகன் நாகமலை கவுண்டன்
10. (தந்)தூரி பலிபீடம் தாயார்
11. பூதம் உள்பட அம்மனுக்குபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 262 / 2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 19 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கொளாநல்லி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	13

இடம்: கோட்டை மாரியம்மன் கோவில் குறிஞ்சியில் உள்ள கல்வெட்டு.

குறிப்புரை: கொங்கு வேளாளரில் பொருள்தந்த கோத்திரம் பட்டக்குறிச்சி காணியாளனாகிய மாரப்ப கவுண்டனர் மகன் பழனிக் கவுண்டர் கோட்டை மாரியம்மனுக்குக் குறிச்சி உபையம் செய்தமை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. பொருள் தந்த கோத்திரமாகிய . . .
2. பட்டக்குரிச்சி காணியாபூனாகிய . . .
3. கவுண்டர் மகன் மாறப்ப கவுண்டர் மகன்
4. பழனிக் கவுண்டர் மகந்
5. கோட்டை மாரியம்மனுக்கு திருப்பணி
6. குருச்சி உபையம்
7. . . . கலியுக சகாற்தம் சசூகூாருயகூ
8. மீ உயஙூ தேதியும் வெள்ளிக் கிழமையும்
9. தோறோ தசியும் உத்திரட்டாதியும் . . .
10. துப்பாதமும் யிப்படி பெற்ற சுபதினத்தில் [உபையம்]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 263 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 4983
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1802
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	286 / 1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	1

இடம்: சுப்ரமணியர் கோயில் கருவறை மேற்குச் சுவர்.

குறிப்புரை: கவுசிய கோத்திரம் முத்தா அய்யன் (மகன்) செல்ல அய்யன் சிவகிரி வேலாயுத சுவாமி கோயில் கருவறை கட்டியமை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. கலியுக சகாத்தம்
2. ச(சு)சூ கூாஅயஙு ஸ்ரீ கவுசிய
3. கோத்திரம் முத்தா அய்யன் செல்ல
4. அய்யன் சிவகிரி ம[கா] வேலாயுத சு
5. வாமி கெர்ப்பகிரி[க]ம் உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 264/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1802
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	287 / 1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	2

இடம்: சுப்ரமணியர் கோயில் முன் மண்டபம் மேற்குச் சுவர்.

குறிப்புரை: சுப்பிரமணியர் கோயில் கொறட்டு வாசல் தேவ கூடத்தில் தலைய நல்லூர்க் கூரைகுலச் செங்காளியப்ப கவுண்டர் உபநெயின விக்கிரகம் செய்து வைத்தமை குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. விகுறிதி ௵ காற்றிகை ௴
2. உ௰ரு ௨ கொறட்டு வாசல்
3. தேவ கூடத்தில் உப
4. நெயின விக்கிறகம்
5. உண்டு பண்ணினவ
6. ன் தலையநல்லூரிலிரு
7. க்கும் கூரை குலத்தில்
8. கொடுமுடி கவுண்டன் மகன்
9. முத்தண கவுண்டன் மகன் செ
10. ங்காளியப்பக் கவுண்டன்
11. உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 265/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1274
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	288 / 1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர் ஊர்க் கல்வெட்டு			
மன்னன்	:	வீரபாண்டியன்	எண்	:	3

இடம்: நாகீசுவரமுடையார் கோயில் கருவறை இரு நிலைகள்.

குறிப்புரை: நக்கீசுவரமுடையார் கோயில் திருப்பணியின் போது தலையநல்லூர் வேளாளர் ஒருவர் இரண்டு திருநிலைகால்களும் கொடையாக அளித்த செய்தி கூறப்படுகிறது. இன்று நக்கீசுவரம் நாகீசுவரம் ஆகி விட்டது.

கல்வெட்டு:

இடப்பக்க நிலை

1. ஸ்வஸ்திஸ்ரீ வீ
2. ர பாண்டி
3. ய தேவற்
4. கு யாண்டு
5. ஒன்பதா
6. வது மேல்
7. கரை அரை
8. ய நாட்டு
9. [தலய]நல்
10. லூர் வெ
11. [ள்ளாளன்] முன்
12. . . . நாக
13. . . .
14. . . .
15. . . .
16. . . .

வலப்பக்க நிலை

17. நல்லூர்
18. நாயனார் திரு
19. நக்கீஸ்வர
20. முடை
21. யார் கோ
22. யிலுக்கு
23. என் தன்
24. மமாகத் தி
25. ருநிலை
26. காலிர
27. ண்டும்
28. இட்டே
29. ன் ட

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 266/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சகம் 1355
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1433
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	289 / 1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	விசயநகரம்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	தேவராயர் II	எண்	:	4

இடம்: நாகேஸ்வர சுவாமி கோயில் கருவறை வடசுவர் மற்றும் அதிட்டானம்.

குறிப்புரை: மேல்கரை அரைய நாட்டுத் தலையநல்லூரில் ஆதிசைவ தேவகன்மிகளில் கௌசிக கோத்திரம் உத்தம நம்பி பந்தபட்டன் நக்கீசுவரர் கோயிலில் அழகிய திருவினார் அம்மை கோயில் கட்டி அம்மையையும் எழுந்தருளச் செய்தது கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ மந்த மஹாராஜாயிராஜந்த ஸ்ரீ வீரப்ரதாப தேவராய மஹாராஜன் ப்ரத்விவிராஜ்யம் பண்ணியருளா நின்ற ஶகாப்தம் ௲௩௱௫௰௫

2. ன் மேற் செல்லாநின்ற ப்ரமாதீச ஸம்வற்ஸரத்து மேஷ நாயற்று ப௯வ பக்ஷத்து பஞ்சமியும் ரோஹிணியும் வியாழக் கிழமையும் பெற்ற

3. இற்றை நாள் மேல்கரையரைய நாட்டு தலைநல்லூரில் சூதிசைவ தேவ கூத்திகளில் கௌஶிக மொத்ரத்து உத்தம நம்பி

4. பந்த பட்டன் இவ்வூரில் நக்கீ[ச்]சுரமுடைய நாயினாருடைய நாச்சியார் அழகிய திருவினாரையும் இவருடைய திருக்கோயிலுந் திருப்பணி செய்வித்தேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 267/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	குரோதன
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1325
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	290 / 1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வீரவல்லாளன் III	எண்	:	5

இடம்: நாகேசுவரர் கோயில் கருவறை தென் சுவர்.

குறிப்புரை: தலையநல்லூர் ஊராளிகளும் பிறரும் நக்கீசுவரமுடையார்க்கு அமுதுபடி, சாத்துப்படி, பூச்சுப்படி, திருப்பணிக்கு தேவதானமாகக் குளத்தை அளித்த செய்தி கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர் . . . [குரோ] தன ஸ[வ]த்ஸரத்து அற்பசி . . . கரும் உள்ளிட்ட ஊராளிகளோம் . . . திரு நக்கீ ஸ்வர முடைய . . . க்கு வறயிற் குளம் தேவதாநமாக குடுத்தபடியாவது அமுதுபடி சாத்துப்படி பூச்சுப்படி மற்றும் திருப்பணிக்கும் உடலாக மு

2. ற்றாட்டு அனுபவிப்பவதாகச் சந்திராதித்தவரை செல்வதாகக் கல்வெட்டிக் குடுத்தோம் இவை தலைய நல்லூர் ஊராளிகள் . . . இது காத்தார் பாதம் தலைமேலே இது பன்மாஹேஸ்வர [illegible]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 268/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சகம் 1632 கலி 4811
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1710
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	291/ 1961–62
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	6

இடம்: வரதராசப் பெருமாள் கோயில் கருவறை தென்சுவர் மற்றும் அதிட்டானப்பகுதி.

குறிப்புரை: தலையநல்லூர் காணியாளரில் கூறைகுலச் செங்காளியப்பகவுண்டன் வரதராசப் பெருமாள் கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம் கட்டிப் பெருமாளையும் எழுந்தருளச் செய்தார். முன்பு பஞ்சம், கலகம் காரணமாகக் கோயில் அழிவுற்ற குறிப்புத் தெரிகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விசயாற் புதய சாலிவாகந சகாற்த்தம் ௲௬௱௩௰௨ கலியுக சகாற்த்தம் ௪௲அ௱௰க க்கு மேல் செல்லாநின்ற விகுறிதி ௵ புரட்டாதி மீ ல் பூறுவபட்சத்தில் விசயதசமியும் குருவாரமும் திருவோண நட்சத்திரமும்

2. சுபநாமயோகமும் கரிசிவகறணமும் பெற்ற சுபதினத்தில் கரியவரதராசப் பெருமாள் வற்ச்ச கலகத் .. . தில் பிறதிட்டை முகூற்த்தமானது இந்த தந்மம் தலையநல்லூரிலிருக்கும் கூரைகுல கோத்திரத்தில்

3. கடை துறக்கி வகையில் தண்டிகை காளியப்ப கவுண்டனுக்குப் பேரன் காளியப்ப கவுண்டன் குமாரன் செங்காளியப்ப கவுண்டன் உபையம் கெற்பக்கிறகம் அற்த மண்டபம்.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 269 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 12 ஆம் நூ.ஆ
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	7

இடம்: சிவகிரி கவுண்டம் பாளையம் நந்தக்காட்டில் இருந்த நடுகல். இப்போது ஈரோடு கலைமகள் கல்வி நிலையக் கலைக் கூடத்தில் உள்ளது.

குறிப்புரை: தலைய நல்லூரில் இருந்த கிழங்க வேட்டுவர் பிரிவைச் சேர்ந்த கிழங்கன் பெரிய கிழங்கனின் நடுகல். கையில் வாளும் கேடயமும் உள்ளது. தலைய நல்லூர் என்பது சிவகிரியின் பழம்பெயர். கவுண்டம் பாளையம் சிவகிரியின் ஒரு பகுதி. எழுத்தமைதி கி.பி. 12 ஆம் நூற்றாண்டு.

கல்வெட்டு:

1. தலையநல்லூ
2. ரில் கிழங்க
3. வேட்டுவ
4. ரில் கிழ
5. ங்கன்
6. பெரிய கி
7. ழங்கன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 270 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 4861
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1760
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	மைசூர் உடையார்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	கிருஷ்ணராச உடையார்	எண்	:	8

இடம்: சிவகிரியில் தேங்கப்ப கவுண்டர் காட்டில் உள்ள பாறைக் கல்வெட்டு.

குறிப்புரை: மைசூர் உடையாரின் அலுவலர்கள் வீரப்ப நாயக்கர், ரங்கராயன் ஆகியோர் காலத்தில் சிவகிரி வேலாயுத சுவாமிக்கு அளித்த தருமத்தைக் கூறுகிறது. இக்கல்வெட்டு உள்ள காடு கொடையாக அளிக்கப் பட்டிருக்கலாம். அளித்தவர் பெயர்ப்பகுதி தெளிவாக இல்லை.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்டலேசுவரன் துலுக்க தள விபாடன் ஒட்டியர்
2. மொகரம் தவிர்த்தான் எம்மண்டலமும் கொண்டருளிய ராசாதிராசன்
3. ராசபரமேசுர ராசமார்த்தாண்ட ராசபூபாலன் ராசகேசரி
4. அசுவபதி கெசபதி நரபதி நவகோடி நாராயண ஈழமும்
5. இலங்கையும் திரைகொண்டருளிய வீரவசந்தராய விருபாக்ஷராயர்
6. ஆணை கடந்த வெங்கடபதிராயர் புசபலராயர் கிருஷ்ணராயர்க்குச்
7. செல்லா நின்ற கலியுக சகாப்தம் சசூஅாசூ௰க சரியான
8. விக்கிரம வருஷம் அப்பிசை மாசம் ௰ தேதி திங்கட்கிழமை
9. மகாமண்டலாதிபதி வீரப்ப நாயக்க அய்யன் அவர்கள்

10. காரியத்துக்குக் கர்த்தரான ரங்கராயனவர் துரைத்தனத்தில்

11. கமுச சரட்டலய்யனவர்கள் சிவகிரி வேலாயுத சுவாமிக்கு

12. விட்ட தன்மம் இந்த தன்மத்தை யாதாம் ஒருவன்

13. மேன் மேலும் ஆலையம் பண்ணி நடத்தி வைச்ச பேர்கள்

14. சிவகிரி வேலாயுத சுவாமி அருள் பெறுவான் யாதாம் ஒருவன்

15. விகாதம் பண்ணினவன் கங்கைக் கரையில் காராம்

16. பசுவைக் கொண்ண துரோகத்திலே போவான்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 271 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 18 ஆம் நூ.ஆ.
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	9

இடம்: பொன்காளியம்மன் கோயிலில் உள்ள சிறு கல்வெட்டுகள்.

குறிப்புரை: இக்கோயில் காணியாளர்களில் கூறை குலம் பிள்ளான், கந்தப்பன், விலையகுளம் மயிலம் பெரியணன் ஆகியோர் செய்த கொடைகள் குறிக்கப்பெறுகின்றன.

கல்வெட்டு:

அ. கூறை செங்காளியப்ப கவுண்டர் மகன் பிள்ளான் உபயம்

ஆ. கூறை ராமணகவுண்டர் மகன் கந்தப்பன் உபயம்

இ. விலைய குலம் மயிலம் பெரியணன் சதாசேர்வை

ஈ. விலையகுலம் தலையநல்லூர் பொன்காளியம்மனுக்கு [தூண்]

உ. தலைய நல்லூர் காணியாளக் கவுண்டர்கள் வேலயன் கூறை தேவ தேவ தேவோத்தமி பொன் காளியம்மனுக்கு கெருப்பக் கிரகம் உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 272/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	சருவசித்தி
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1767
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	10

இடம்: பொன் காளியம்மன் கோயில். உள்மண்டபம் கிழக்குச் சுவர்.

குறிப்புரை: தலைய நல்லூர் காணியாளரில் விலைய குலத்தைச் சேர்ந்த காளியப்ப கவுண்டர், கொமர கவுண்டர் ஆகியோர் கொறட்டு வாசல் திருப்பணியின்போது ஒரு அங்கணம் கட்ட ரூபாய் 200 அளித்தனர். (கொறட்டு வாசல் – கோயில் நுழைவு மண்டபம்)

கல்வெட்டு:

1. சறுவசித்தி வருஷம் தையியி மாசம் உயிரு தேதி
2. தலைய நல்லூர் வேலைய கோத்திரம் புகளியூரிலே
3. இருக்கும் சின்னக் கவுண்டன் மகன் காளியப்ப கவு
4. ண்டன் கொமறகவுண்டன் பொன் காளியம்ம
5. ன் கொறட்டு வாசல் வேலை ஒரு அங்கணத்துக்கு
6. குடுத்தது ரூபாய் 200 பொன் காளியம்மன் உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 273 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	பிரசோத்பத்தி
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1751
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	11

இடம்: பொன்காளியம்மன் கோயில் கதவு.

குறிப்புரை: மஞ்சப்புளிக் கிராமம், ஆத்திக் காட்டுவலசு இராமசாமிக் கவுண்டர் பொன்காளியம்மன் கோயிலில் கதவு செய்தளித்தது குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்ரீ பிரசோ
2. த்பத்தி வறுசம்
3. தைய் மாசம் உயிள தேதி
4. மஞ்சப்புளி கிராமம்
5. ஆத்திக்காட்டு வலசு
6. கறும கவுண்டன் மகன்
7. றாமசாமிக் கவுண்டன்
8. பொங்காளியம்ம
9. னுக்கு உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 274 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 18 ஆம் நூ.ஆ.
ஊர்	:	சிவகிரி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	12

இடம்: பொன் காளியம்மன் கோயில் முன் மண்டப நிலைக்கால்.

குறிப்புரை: தலைய நல்லூர் அதிகாரன் கொல்லன கவுண்டர் முன்மண்டபத் திருப்பணியின்போது இரண்டு நிலைகால் அளித்தமை கூறப்படுகிறது.

கல்வெட்டு:

1. அரையநாடு தலையநல்லூரிலே யிருக்கும் அதிகாரன்
2. கொல்லன கவுண்டன் பொன் காளியம்மனுக்கு
3. க் கொடுத்தது உ காலு உபயம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 275 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1292
ஊர்	:	முருங்கத்தொழுவு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	/216 / 1967–68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கோ.சா. 1:266
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	சுந்தரபாண்டியன்	எண்	:	1

இடம்: பிரமலிங்கேஸ்வரர் கோயில் கருவறை கிழக்குச் சுவர் மற்றும் அதிட்டானப்பகுதி.

குறிப்புரை: பெருந்தொழு ஊரும் ஊரவரும் கோயிலுக்கு முன்பு உள்ள குளம், அதன் கீழ்த் திருக்கொக்குறோணி, அதன் கீழ் அறச்சலூர் வழியில் குளம், மேலைக் குளத்தில் அடிக்கீழ் ஒரு மா நிலம், உள்ளூரில் ஒரு புன்செய் இவைகள் அனைத்தையும் குடிநீங்காத் தேவதானமாகச் சிவன் கோயிலுக்குக் கொடுத்தனர். உழுபவர் விளைச்சலில் சரிபாதி கோயிலுக்குக் கொடுக்க வேண்டும். அமுதுபடிக்குப் போக மீதி உள்ளவற்றைத் திருப்பணிக்குப் பயன்படுத்தவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. பெருந்தொழு என்ற இவ்வூர் இன்று முருங்கத்தொழு என்று அழைக்கப்படுகிறது. கல்வெட்டில் குறிக்கப்பட்ட பிடாரி கோயில் இன்று வாகைத்தொழு அம்மன் கோயில் என அழைக்கப்படுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு எ வது சித்[தி]ரை ம[ாதம் பூ]ந்துறை நாட்டுப் பெருந்தொழுவில் ஊரும் ஊராளிகளோம் இவ்ஊர் ந
2. ாயனார் ஸ்ரீஹிஸ்வரஉடையார்ற்குத் திருமுன்பில் தீத்தக்குளமும் இதந் கீழ்த் திருக்கொக்குறோணியும் இதன் கீழ் அறைச்சலூர் வழியிற் குளமும் மேலை

3. க் குளத்திலடிக் கீழே ஒருமாநிலமும் பிடாரி கோயிலுக்கு வடக்கும் வண்ணான் பாழிக்குத் தெற்கும் கருக்கோடு நாலிக்கு கிழக்கும் வெள்ளோட்டு வழிக்கு மேற்கு

4. ம் இன்னான் கெல்லைக்குட்பட்டதொரு புன்செய்யும் சண்டீ ஸ்வரநாயனார் ஸ்ரீஹஸ்தத்தே உதகம் பண்ணிக் குடுத்தோம் இக்குளங்களுக்கு நீரேறு மிடமெல்லா

5. நில மாவதாகவும் குடிநீங்காத் தேவதானமாகப் பயிற் செய்து சரிபாதி வாரங்குடுப்போமாகவும் மேலூற் குளத்திலொருமா நிலமுமொத்த வாரங் கு

6. டுப்போமாகவும் புந்செய் ஊராகப் பயிற் செய்து முற்றூட்டுங் குடுப்போமாகவும் இக்குளங்களில் விளைஞ்சு முதலான பண்டம் அமுதுபடி நீக்கித் திருப்பணிக்கு

7. இடுவதாகவும் இத்தருமஞ் சந்ரார்தித்தவரை செல்விதாகவும் இத்தந்மத்தை அழிக்குமிவன் வழி ஏழெச்சமறுவாந் இவை

8. ஸ்ரீ பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 276 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1291
ஊர்	:	முருங்கத்தொழுவு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	217 / 1967–68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர் ஊர்க் கல்வெட்டு			
மன்னன்	:	சுந்தரபாண்டியன்	எண்	:	2

இடம்: பிரமலிங்கேசுவரர் கோயில் அர்த்தமண்டப வடசுவர் அதிட்டானப் பகுதி.

குறிப்புரை: பிரமலிங்கேசுவரர் கோயில் திருப்பணியின் போது பெருந்தொழுவில் உள்ள கொங்கு வேளாளர்களில் பெரிய குலத்துப் பெரியநம்பி நம்பியான நல்லமங்கைபாகன் அர்த்த மண்டபத் திருநிலைகால்கள் இரண்டும் படிகள் இரண்டும், பலிபீடமும் செய்வித்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு சு வது பூந்துறை நாட்டுப் பெருந்தொழுவில் வெள்ளாழர் பெரியகளில்ப் பெரிய

2. நம்பி நம்பியாந நல்லமங்கை பாகனேன் இவ்வூர் நாயனார் ஸ்ரீஹிஸ்வரஜுடையார் கோயிலில் அத்த மண்டபத்தில் திருநிலைகா

3. ல் இரண்டும் படியும் பெலிபீடமுஞ் செய்வித்தேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 277/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1291
ஊர்	:	முருங்கத்தொழுவு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	218 / 1967–68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர் ஊர்க் கல்வெட்டு			
மன்னன்	:	சுந்தரபாண்டியன்	எண்	:	3

இடம்: பிரமலிங்கேசுவரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்குசுவர் அதிட்டானப் பகுதி.

குறிப்புரை: பிரமலிங்கேசுவரர் கோயில் திருப்பணியின் போது இவ்வூர் கொங்கு வேளாளர்களில் பெரிய குலத்து நம்பி நம்பியான பிள்ளை ஞான சம்பந்தன் என்பார் திருநிலைகால் கொடையாக அளித்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு சுவது பூந்துறை நாட்டுப் பெருந்தொழுவில் வெள்ளாழன் பெரியகளில் நம்பி நம்பியான பிள்ளை ஞானசம்பந்தனேன் இவ்

2. வூர் நாயனார் ஸ்ரீஹஸ்வர உடையார் கோயிலில் திருநிலை காலிரண்டும் செய்வித்தேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 278 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1291
ஊர்	:	முருங்கத்தொழுவு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	219 / 1967–68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர் ஊர்க் கல்வெட்டு			
மன்னன்	:	சுந்தரபாண்டியன் எண்		:	4

இடம்: பிரமலிங்கேசுவரர் கோயில் மகாமண்டபம் தெற்கு சுவர் அதிட்டானப் பகுதி.

குறிப்புரை: பிரமலிங்கேசுவரர் கோயில் திருப்பணியின் போது கொங்கு வேளாளர் பெரியகுலம் சிறுநம்பி நம்பியான நம்பியாரூரன் என்பவர் கோயில் திருக்கட்டளையில் திருநிலைகால் இரண்டும், ரிஷப தேவரையும் எழுந்தருளச் செய்து ரிஷப தேவர் கோயிலும் தன் உபயமாகச் செய்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு சுவது சித்திரை மாதம் பூந்துறைநாட்டுப் பெருந்தொழுவில் வெள்ளாழந் [பெரிய] களி

2. ல் சிறு நம்பி நம்பியான நம்பியாரூரனேன் இவ்வூர் நாயினார் ஸ்ரீஸ்வரஜுடையார் கோயிலில் திருக்கட்[டளை]யில் திருநிலைகால் இரண்டும் இஷ

3. ஹ தேவரையும் ஏறியருளப் பண்ணி இஷஹ தேவர் கோயிலுந்ஞ் செய்வித்தேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 279 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 4897
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1796
ஊர்	:	முருங்கத்தொழுவு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	220 /1967-68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	5

இடம்: பிரமலிங்கேசுவரர் கோயில் தக்ஷணாமூர்த்தி சன்னதி மேற்கு, தெற்கு, கிழக்குச் சுவர் அதிட்டானப்பகுதி.

குறிப்புரை: பிரமலிங்கேசுவரர் கோயில் தட்சிணாமூர்த்தி கோயிலை கணக்கர் நஞ்சயபிள்ளை தன் உபையமாகக் கட்டிக் கொடுத்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கலியுக சகாத்த[த]ம் சதூஆகூயெ மேல்ச் செல்லாநின்ற ராட் [ச] த தை மாசம் யசு தேதியு சுக்கிற வாரமும் உத்திர நட்செத்திரமும் பஞ்சமியும் பெற்ற சு [ஹத்] தினத்தில்

2. பூந்துறை நாட்டு திருமுருங்கத்தொளு கணக்கு பழினியப்புள்ளை மகன் திருவேங்கட புள்ளை மகன் நஞ்சிய புள்ளை தெச்ஸணாமூர்த்தியும் கோயிலும் செய்வித்தேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 280/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1292
ஊர்	:	முருங்கத்தொழுவு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	221 / 1967–68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர் ஊர்க் கல்வெட்டு			
மன்னன்	:	சுந்தரபாண்டியன் எண்		:	6

இடம்: பிரமலிங்கேசுவரர் கோயில் விநாயகர் கோயில் மேற்கு, தெற்குச் சுவர் அதிட்டானப்பகுதி

குறிப்புரை: பிரமலிங்கேசுவரர் கோயில் திருப்பணியின் போது இவ்வூர் கொங்கு வேளாளர்களில் பயிர குலத்தைச் சேர்ந்த நம்பியாரூரன், மன்னு திருவரங்கக் கூத்தன், கொன்றைவார் சடையன், பெரியபிள்ளை, பொல்லாதபிள்ளை ஆகிய ஐந்துபேரும் பிள்ளையாரை ஏறியருளச்செய்து பிள்ளையார் கோயிலையும் கட்டி வைத்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.ஐவரும் கொடுத்த இருபது பணம் வாங்கித் திருப்பணிக்கு அளித்ததுடன் மேலூர்க் குளத்தில் ஊரும் ஊரவரும் முப்பது குழி நிலமும் வாங்கிக் கோயிலுக்கு அளித்து நெல்கொடுப்போம் என்றும், குளத்தில் நீர் இல்லாதபோது நெல்லுக்குப் பதிலாகத் தினை கொடுக்கவும் ஒப்புக் கொண்டனர். கோயில் சிவபிராமணர்கள் இவர்களிடம் ஒரு கழஞ்சு பொன் பெற்று இவர்கள் கட்டிய கோயிலில் சந்தியாதீபம் வைத்தனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு எவது சித்திரை மாதம் பூந்துறை நாட்டுப் பெருந்தொழுவில் ஊரும் ஊராளிகளோம் இவ்வூர்க் காணியாளன் பெரியகளில் நம்பியாரூரனும் மன்னு திருவரங்

2. கக் கூத்தனும் கொன்றைவார் சடையனும் பெரியபிள்ளையும் பொல்லாத பிள்ளையும் இந்த ஐய்வரும் தங்கள் தன்மமாகப்

பிள்ளையாரையும் ஏறியருளப் பண்ணிக் கோயிலுஞ் செய்வித்து . . . இவர்கள்

3. பக்கல் இருபது பணம் வாங்கி யுடையார் கோயில் திருப்பணிக்கிட்டு மேலூற் குளத்தில் இருபதடிக் கோலாலே முப்பது குழியால் ஒரு கழனி இட்டுக் குடுத்தோம் இக்கழனி . . . பயிற் செய்து . . . திக்கு கொங்க

4. ால் இருகலனே தூணி நெல் ஆண்டுவரை அளந்து குடுப்போமாகவும் குளமெத்தாத நாள் இருகலனே தூணித்தினை குடுப்போமாகவும் இந்த அழுதுபடி இவ்வூரிலே இருந்தாரொருவர் சந்திராதித்தவரை அளந்து வரக்க[ட]வதாகவும் இப்படி

5. சம்மதித்து இ[க்*]கல் வெட்டிக் குடுத்தோம் ஊரும் ஊராளிகளோம் மேற்படினாளில் தேவற் கோயிற் காணியுடைய தேவகம்மிகளில் கவுணிய கோத்திரத்து உய்ய வந்த பட்டனும் ஆலால சுந்திர நம்பியும் தில்லைக் கூத்தன் மன்றுளாடு நம்

6. பியும் இப்பிள்ளையார் கோயிலுக்குச் சந்தியாதீபம் ஒன்றுக்கு மேற்படியார் ஐவர்பக்கலும் பற்றின பொன் கழஞ்சு இச் சந்தியாதீபம் சந்திராதித்தவரை குடங்கொடு கோயில் புகுவார் இடக்கடவார் களாகவும் இத்தந்மங்களை

7. அழித்தா[ருண்டா]கில் தன்வழிவழி ஏழச்சமறுவான் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 281 /2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1291
ஊர்	:	முருங்கத்தொழுவு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	222 / 1967–68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர் ஊர்க் கல்வெட்டு			
மன்னன்	:	சுந்தரபாண்டியன்	எண்	:	7

இடம்: பிரமலிங்கேசுவரர் கோயில் சண்டேஸ்வரர் கோயில் சுவர் மற்றும் அதிட்டானப்பகுதி

குறிப்புரை: பிரமலிங்கேசுவரர் கோயில் திருப்பணியின்போது இக்கோயில் காணியுடைய சிவபிராமணர் கவுணிய கோத்திரத்து உய்யவந்த பட்டன் சொக்கனான ஆலாலசுந்தர நம்பி என்பவர் சண்டிகேசுவர நாயனாரை எழுந்தருளச் செய்து கோயிலும் அமைத்துச் சந்தியாதீபமும் வைத்ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு பாண்டு சுவது பூந்துறை நாட்டுப் பெருந்தொழுவி

2. ற் கோயிற் காணி உடைய தேவகைம்மிகளில் கவுணிய கோத்திரத்து உய்யவந் [த] பட்டந் சொக்கனாந

3. ஆலால சுந்திரநம்பியேன் சண்டீசுர நாயநாரையும் ஏற்றிக் கோயிலுஞ் செய்

4. வித்துச் சந்தியாதீபமும் வைத்தேந் சந்திராதித்தவரை குடங்கொண்டு புகுவாரெல்லாம் இடக்

5. கடவதாகவும் இவை நந்தமர் பாற்படுத்துக் கொள்க

.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 282/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 4902
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1801
ஊர்	:	முருங்கத்தொழுவு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	223 / 1967–68
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	சுந்தரபாண்டியன்	எண்	:	8

இடம்: பிரமலிங்கேசுவரர் கோயில். வடிவுள்ளமங்கை சன்னதி தெற்கு கிழக்கு சுவர்.

குறிப்புரை: முருங்கத்தொழு கணக்கர் நஞ்சையபிள்ளை என்பவர் பிரமலிங்கேசுவரர், வடிவுள்ள மங்கை ஆகியோரை எழுந்தருளச் செய்து கோயிலும் கட்டி வைத்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன கலியுக சகாற்தம் பிறந்த சசூஙகூஉ க்கு மேல் செல்லா

2. நின்ற துன்மிதி ஹூ சித்திரை மாதம் [உ] ஙய உ தேதியில் பூந்துறை நாடு திருமுருங்ை

3. க தொழுவில் தலத்துக் கணக்கு பளனியப்ப பிள்ளையவர் மகன் திருவேங்கிட பிள்ளையவர் மகன் . . .

4. நஞ்சிய பிள்ளை விறுமீசுபரர் வடிவுள்ள மங்கையம்மனுக்கு கோவிலும் சுவாமியும் பிறதிஷ்டையும் செய்வித்தேன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 283/2004**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	கலி 4949
வட்டம்	:	ஈரோடு	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1848
ஊர்	:	முருங்கத்தொழுவு	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	–	எண்	:	9

இடம்: முருங்கத்தொழு கிராமத்தில் உள்ள சிறு குன்றான அணியரங்கப் பெருமாள் மலை அணியரங்கநாதர் கோயில் தென்சுவர்.

குறிப்புரை: முருங்கத் தொழு ஊரினரான கொங்கு வேளாளர்களில் வெள்ளோடு சாத்தந்தைகுலப் பெரியண கவுண்டரும், பெரியகுல வேணுடையாக் கவுண்டரும், கந்தப்ப கவுண்டரும், நல்லிக் கவுண்டரும், கணக்கர் நஞ்சையபிள்ளையும் அணியரங்கப் பெருமாளைச் செய்தளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. பெரியகுலத் தலைவர் பெயர் 'வேணாடுடையார் என்பது அப்பெயரை அக்குலத்தைச் சேர்ந்த மக்களும் வைத்துக் கொண்டுள்ளனர்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கலியுகசகாத்தம்சசூகூாசயகூ மேல்செல்லா நின்ற பிங்கழ ௵ ஆவ
2. ணின மீ ௰ரு தியும் ஆதித்தவாரமும் பஞ்சமியும் சோதி நட்சத்திரமும் பெற்ற சுபதினத்தில்
3. பூந்துறைநாட்டு முருங்கத்துளு வெள்ளோட்டு சாத்தந்தை குலத்தில் முதலியாக் கவுண்டன் மகன் பெரிய
4. ணகவுண்டனும் பெரிய குலத்தில் செல்லப்ப கவுண்டன் மகன் பெரிய தம்பி கவுண்டன் மகன் கந்தப்ப கவுண்டன் மகன்
5. வேணுடையாக் கவுண்டனும் கல்லாக் கவுண்டன் மகன் கந்தப்ப கவுண்டனும் செல்லப்ப கவுண்டன் மகன் நல்லிக்
6. கவுண்டனும்கணக்கு... மகன்நஞ்ச[ய]பிள்ளை அணியரங்கப் பெருமாள்செய்
7. வித்தேன்...

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1018/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	துந்துபி
வட்டம்	:	காங்கயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி 16 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அகிலாண்டபுரம்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை		:241 / 1920
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	விசயநகரம்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	வீரசாயண உடையார்	எண்	:	1

இடம்: அகத்தீசுவரர் கோயில் கருவறை வடபுற அதிட்டானம்.

குறிப்புரை: காங்கயம் ஊரும் ஊராளிகளும் காங்கயம் அகத்தீசுவரருக்கு இரவுக் கால பூசைக்கு வேண்டிய நெல்லுக்கு மாதம் ஒரு பணம் அளிப்பதாக ஒப்புக் கொண்ட கல்வெட்டு. இதல்ல என்றவன் ஏழேழு சென்மமும் நரகத்துக்கு நாற்றங்கால் ஆவான் என்று புதுமையான ஓம்படைச் சொல் பயின்று வந்துள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி[ஸ்ரீ] ஸ்ரீஉ ஊாஉண்டலீஸ்வரன் சுரிராய விபாடன் பாஷைக்கு தப்புவராயர் கண்டன் ஸ்ரீ வீரசாயணர் உடையற்கு செல்லா நின்ற துந்துமி வருஷத்து

2. காத்திகை மாதம் ௰ரு தியதி காங்கேயத்தில் ஊரும் ஊராளிகளோம் எங்கள் ஊர் ஆளுடையநாயினார் திருவகத்தீஸ்வரமுடையாற்கு இராக்காலத்து

3. க்கு நெல் அமுதுபடிக்கு மாதத்தொருபணம் நடத்தக் கடவோமாகவும் இதல்ல என்றவன் ஏழ்ழேழு செனனமும் நரகத்தக்கு நாற்றங்காலாவன்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 1019/2003**

மாவட்டம்	:	ஈரோடு	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	காங்கயம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி 16 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அகிலாண்டபுரம்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	242 / 1920
